
# வரலாறு

## க.பொ.த சாதாரண தரம்

GCE O/L

S.J. ஆதி



# வரலாறு

## முதலாந்தவணை

### தரம் - 10 ற்குரியது

ஆசிரியர்
**S.J. ஆதி**

வெளியீடு

# அலகு – 01

# வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

## 01. இலங்கை வரலாற்றின் காலப்பகுதி

- ★ புராதன காலம் (விஜயன் வருகை – 1500 வரை)
- ★ மத்திய காலம் (கி.பி 1500 – 1948 வரை)
- ★ நவீன காலம் (1948க்கு பின்)

## 02. வரலாறு

- ★ வரலாற்றின் தந்தையாக கருதப்பட்டவர் ஹெரடோரஸ் (கி.மு 484 – 425)
- ★ History என்னும் பதம் இஸ்ரோறியா (isoria) எனும் கிரேக்க சொல்லின் அடிப்படையில் தோற்றம் பெற்றது.
- ★ இஸ்டோரியா (istoria) என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆராய்ச்சியின் விளைவால் பெற்ற அறிவு அல்லது செய்தித் தொகுப்பு என்பது பொருளாகும்.
- ★ இலங்கையின் துலக்கமான வரலாறு கி.மு 6ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை இடையூறு இன்றி தொடர்ந்து வருகின்றது. (2500 வருடம்)
- ★ கி.மு 6ம் நூற்றாண்டில் தான் அறிவியல் அடிப்படையிலான வரலாறு துளிர்விட ஆரம்பித்தது.
- ★ கிரேக்கர்கள் அவர்களுள் குறிப்பாக அயோனியர்களே வரலாற்றை எழுதும் முறைக்கு அடி கோலியவர்களாவர்.

## 03. வரலாறு பற்றி முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணம்.

- ★ ஈ.எச்.கார் - வரலாறு என்பது கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே உள்ள முடிவற்ற சம்பாசனை
- ★ ஸ்ருவர்ட்பிகொட் - புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தை கற்பது தான் வரலாறு.
- ★ அரிஸ்டோட்டில் - மாற்ற முடியாத கடந்த காலத்து நிகழ்ச்சிகளே வரலாறு.

★ ரெனியர் - கடந்த காலத்து மனிதரைச் சார்ந்த ஆராய்ச்சியே வரலாறு

★ York powell
(யார்க் பாவெல்) - சமுதாய நிலையில் வாழும் மனித இனத்தின் தன்மையை முறைப்படுத்தி விளக்குவதே வரலாறு.

★ வீல்டுரண்ட் - பண்பட்ட மனிதர்கள் கடந்தகாலத்தில் செய்தவை, செய்ய நினைத்தவை, பற்றிய விவரணம்

★ பேர்க்ஹாட் - எழுதிப் பாதுகாத்து வைத்திருக்கும் அளவிற்கு பெறுமதிமிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகத்திலிருந்து தேடிக்கண்டு கொள்வதாகும்.

★ திரவீலியன் - வரலாறு என்பது ஒரு தனிப்பாடமல்ல அது பல பாடங்களின் சேர்க்கை ஆகும்.

**04. வரலாற்று மூலாதாரங்கள் என்பது**

★ குறித்த ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்றறிய அடிப்படையாக அமையும் சான்றுகளான எழுத்தாவணங்கள், ஆக்கங்கள் முதலானவற்றை உள்ளடக்கியவை மூலாதாரங்கள் எனப்படும்.

★ வரலாறு என்ற கட்டிடத்தை அமைப்பதற்கு பயன்படும் செங்கற்களே வரலாற்று மூலாதாரங்கள் எனப்படும்.

★ வரலாற்று மூலாதாரங்களை இலக்கிய மூலாதாரங்கள் என்றும், தொல்பொருள் மூலாதாரங்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**இலக்கிய மூலாதாரம்**

- இலக்கிய மூலாதாரம்
  - உள்நாட்டு
  - வெளிநாட்டு
- தொல்பொருள் மூலாதாரம்
  - கல்வெட்டு
  - நாணயம்
  - சிதைவு

**இலக்கிய மூலாதாரம்**

- இறந்த காலத்தில் வாழ்ந்த மனிதன் பல்வேறு கால கட்டங்களிலும் எழுதி பாதுகாத்து வைத்த நூல்களும் அறிக்கைகளும் இலக்கிய மூலாதாரங்கள் எனப்படும்.
- நூல்கள், கற்பனைக் கதைகள் தேசசஞ்சாரிகளின் குறிப்புக்கள், வம்சக்கதைகள் என்பன இலக்கிய மூலாதாரங்கள் எனப்படும்.
- இது (அ) உள்நாட்டு இலக்கிய மூலாதாரம் என்றும் (ஆ) வெளிநாட்டு இலக்கிய மூலாதாரம் என்றும் வகைப்படுத்தப்படும்.

அ. உள்நாட்டு இலக்கிய மூலாதாரம்

i. தீபவம்சம்

- இலங்கை வரலாற்றில் எழுதப்பட்ட முதல் பாளி நூலான இது கி.பி 4ம் நூற்றாண்டில் பூரணப்படுத்தப்பட்டது.
- புராதனகால முதல் மகாசேனன் வரையிலான வரலாற்றை கூறுகின்றது.
- பௌத்த சங்கத்தின் தொடர்பில்லாமல் உருவாக்கப்பட்ட ஓர் இலக்கியம்.
- துட்டகைமுனு எல்லாளன் வரலாறானது பதின்மூன்று செய்யுள்களில் மாத்திரம் கூறப்படுகின்றது.
- தீவகத்தின் வம்சாவழிப் பட்டியலை அது தொகுக்கப்பட்ட காலம் வரை தருகின்ற அதே வேளை இது இலக்கிய மூலாதாரங்களில் காலத்தால் முற்பட்டதாகும்.

ii. மகாவம்சம்

- இம்மகாவம்சத்தினை வில்லியம் கெய்கர் என்பவர் 1908 இல் ஜேர்மன் மொழியிலும், மாபெல் ஹெய்ன்ஸ் என்பவர் ஆங்கில மொழியிலும் மொழிபெயர்த்தார்கள்.
- பாளிமொழியில் அமைந்த ஒழுங்குபடுத்தப்பட்ட நம்பத்தகுந்த தொடரிலக்கியமாக இது காணப்படுகின்றது.
- இதன் விளக்க நூலாக வம்சத்த பஹாசினி / மகாவம்சடீகாவ காணப்படுகிறது.
- விஜயன் வருகை முதல் மகாசேனன் வரையிலான வரலாற்றை கி.பி 5ம் நூற்றாண்டு / 6ம் நூற்றாண்டில் பூரணத்துவப்படுத்தியது.
- இதன் புகழ்ப்பெயர்களாக தேரவாத புராணம், மகா விகாரை புராணம், துட்டகைமுனு காவியம் / துட்ட காமினியின் காவியம் என்பவற்றை குறிப்பிட முடியும்.
- இதன் தோற்றத்திற்கான மூலநூலாக அட்டகதா இலக்கியங்கள் காணப்படுகின்றன.
- இது 37 அத்தியாயங்களில் 1 – 5 வரை இந்தியாவில் பௌத்தம் தோன்றியதும், புத்தரைப் பற்றியதுமான வரலாற்றையும், 6 – 10 வரை இலங்கைக்கு பௌத்தம் அறிமுகமான வரலாற்றையும், 10 – 37 வரை தேவ நம்பியதீசன் கால பௌத்த பரவல் தொடங்கி அதன் பின்னரான அரசர்கள் வரையிலும் குறிப்பிடப்படுகிறது.
- இலங்கை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் மகா வம்சத்தையே மூல நூலாகக் கொண்டு வரலாற்றினை எழுதி வருகின்றனர்.
- துட்டகைமுனுவின் வரலாறு இங்கு அத்தியாயங்களாக உருமாற்றம் பெற்றது
- தேரவாத மதப்பிரிவினையுடைய மகாநாமதேரர் மகாவிகாரையைச் சார்ந்து நின்று திக்சந்த செனவிய பிரிவெனாவில் வைத்து எழுதினார்.
- இத்தீவில் தேரவாதம் மட்டுமே வாழும் எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டெழுந்த இலக்கியம் (தம்மதீபக் கோட்பாடு)
- இலங்கை வரலாற்றுக்குரிய இலக்கிய ஆதாரங்களில் முதன்மை பெறுவது.

iii. சூளவம்சம்

- தர்மகீர்த்தி தேரர் என்பவரால் பாளிமொழியில் 42 அத்தியாயங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது.
- இதன் காவியநாயகனாக 1ம் பராக்கிரமபாகு காணப்படுகிறார்.
- மகாசேனன் முதல் 1ம் பராக்கிரமபாகு வரையிலான வரலாற்றை அறிய இந்நூல் உதவுகிறது.
- கி.பி 4ம் நூற்றாண்டு தொடக்கம் 18ம் நூற்றாண்டு வரையிலான வரலாற்று தகவல்களைக் கூறுகிறது.

iv. போதிவம்சம்

- எழுதியவர் : உபதீஸதேரர்
- தகவல் : மகாபோதி பிக்குகளின் வரலாறு

v. ராஜாவலிய

- தகவல் : கம்பளை முதல் கோட்டை கால அரசர்களின் வரலாறு

vi. நிகாயசங்கிரகாய

- எழுதியவர் : கம்பளை கடலாதெனிய விகாரையைச் சேர்ந்த ஜயபாகு தேவரக்ஷிதர் எழுதியமை
- தகவல் : பௌத்தசாசன வரலாற்றை எடுத்தியம்புகிறது புத்தர் பரிநிர்வாண மெய்தியதிலிருந்து இலங்கைக்கு பௌத்தம் பரவி வளர்ந்த வரலாற்றை கம்பளை 5ம் புவனேகபாகு காலம் வரை கூறுகின்றது
- காலம் : கம்பளை.

vii. பூஜாவலிய

- எழுதியவர் : புத்தபுத்திரதேரர்
- தகவல் : அரசியல் சமய தகவல்
- காலம் : தம்பதெனிய

viii. தலதாவம்சம்

- தகவல் : தலதா பிக்குகளின் வரலாறு

ix. தாது வம்சம்

- தகவல் : பௌத்த தூபி அமைப்பு

x. சமந்தபாசாதிக, விசுத்திமார்க்கய

- எழுதியவர் : புத்தகோசதேரர்

**05. கோட்டை இரசாதானி முதல் கண்டி இராசதானி வரையிலான காலப்பகுதி வரலாற்றை அறிய உதவுபவை**

தூது காவியம் : பரவி சந்தேசய
கிரா சந்தேசய
கோகுல சந்தேசய
செலலிகினி சந்தேசய
ஹம்ச சந்தேசய
ரஹி சந்தேசய
} கோட்டை

திசர சந்தேசய
மயூர சந்தேசய
(முதலாவது தூது நூல்)
} கம்பளைக்காலம்

போர் காவியம் : சீதவாக்க சட்டன
இங்கிரிசி சட்டன
கொன்ஸ்தாந்தினு சட்டன

புகழ் காவியம் : பெரகும்பா சிரித்த

**Note :**

- தூதுகாவியம் சந்தேசிய நூல், நாலடிச் சந்தக்காவியம் எனவும் அழைக்கப்படும்.
- போர் என்பது சட்டன.
- அட்டகதா இலக்கியம் என்பது செவிவழியாக பேணப்பட்டு வரும் பரம்பரை, மரபுக்கதைகள்

**06. இலங்கையின் இராசதானிகளும் அங்கு எழுந்த இலக்கிய மூலாதாரங்களும்.**

- அனுராதபுரம் - தீபவம்சம், மகாவம்சம், சமந்த பாசாதிக, விசுத்தி மார்க்கய, யானகிகரனம், தம்பியா அட்டுவா ஹற்றப்பதய, சிகவலந்தசிக, சிசுவலந்தவினிச, சியமஸ்லகா, பொரணசிக
- பொலனறுவை - முவதெவ்தாவத, சசந்தாவத ஜாதக அட்டுவா, தர்மப் பிரதீபிகாவ அமாவத்துர, புத்தசரண.
- தம்பதெனியா - சூளவம்சம், சத்தர்மரத்னாவலிய, யோகர்ணவய, பூஜாவலிய, கவிசிலுமின, நில் அகிகநுஸஜத, வம்சம், சித்தசங்கராவ, காமதேனு, கந்தவுறு சிரித்த, விகாரம்வம்ச ஹத்துனகல்ல, ரசவாகினி
- கோட்டை - குத்திலகாவியம், பெரகும்பாசிரித, காவியசேகர,செலலிஹிணி சந்தேசிய (கிளிவிடுதூது), கோக சந்தேஸய, கிராசந்தேஸய, புகுணலங்காரய.
- கண்டி - மந்தாரம் பரவத, ராஜரட்ணகரய, இராஜசிங்கசரித் மகாகட்டண முத்துக்குமாரன் கதை
- யாழ்ப்பாணம் - யாழ்ப்பாண வைபவமாலை, வையா பாடல், ரகுவம்ச தமிழ்மொழிபெயர்ப்பு

**07. இலங்கையின் வரலாற்றினை புராதனகாலத்திலிருந்து தொடர்ச்சியாக அறிந்து கொள்ள உதவும் இலக்கியம் எது?**

★ மகாவம்சம்

**08. வரலாற்றை அறிந்து கொள்ளும் நோக்கில் இலக்கிய மூலாதார ங்களை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை?**

★ நூல் எழுதப்பட்ட காலம்

★ நூல் ஆசிரியர்

★ நூல் ஆசிரியர்களின் நோக்கம்

★ நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட விதம்

**ஆ. வெளிநாட்டு மூலாதாரங்கள்**

**09. வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களில் இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று எழுதப்பட்டவை**

★ சீன இலக்கியம் - பாகியன் தேரரின் தேச சஞ்சார அறிக்கை (பௌத்த இராச்சியம் பற்றிய விபரம்)

★ அறபு இலக்கியம் - இபின் பதுதாவின் தேச சஞ்சார அறிக்கை (ரிக்லா ஜேனல்)

★ போர்த்துக்கேய - இலக்கியம் ரிபைரோ என்பவரின் இலங்கை பற்றிய நூல் (ரிபைரோவின் இலங்கை வரலாறு)

★ ஒல்லாந்து - இலக்கியம் பிலிப்ஸ் பல்டியஸ் என்பவரின் இலங்கை பற்றிய நூல் (போல்டியசின் இலங்கை வரலாறு)

★ ஆங்கில இலக்கியம் - ரொபட் நொக்ஸ் அவர்களின் நூல் (அன்றைய இலங்கை)

**10. இலங்கைக்கு வருகை தராது இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் கேட்டறிந்து எழுதப்பட்டவை**

| | | |
|---|---|---|
| ★ கிரேக்க மூலாதாரங்கள் | - | அரிஸ்டோட்டிலின் டிமுன்டோ, மெகஸ்தனிஸின் இண்டிகா, ஒனெசி கிரிட்டசின் அறிக்கை |
| ★ உரோம மூலாதாரங்கள் | - | பிளினியின் நெச்சுரலில் ஹிஸ்டோரியா தொலமியின் பூகோள சாஸ்திரப் பிரவேசம் தொலமியின் இலங்கைப்படம் |
| ★ சீன மூலாதாரங்கள் | - | ஹியுங்சாங் பிக்குவின் தேச சஞ்சார அறிக்கை |
| ★ போர்த்துக்கேய மூலாதாரங்கள் | - | அருட்தந்தை பர்னாவோ குவேரோஸ் அவர்களின் இலங்கை பற்றிய அறிக்கை (இலங்கையை வெற்றி கொள்ளல்) |

**11. இலங்கை வரலாற்றை வெளிப்படுத்தும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக.**

- ★ சிலப்பதிகாரம்
- ★ மணிமேகலை
- ★ பத்துப்பாட்டு

**12. இலங்கை பற்றிய தகவல்களை வெளியிட்ட தேச சஞ்சாரிகள்**

i. பாகியன் தேரர்

- நாடு : சீனா
- பிறந்த இடம் : சன் - சீ
- வருகை தந்தது : கி.பி 414ல் புத்ததாச மன்னன் காலத்தில்
- வருகை தந்த விதம் : பௌத்த சமய நூல்களைத் தேடி சீனாவில் இருந்து இந்தியாவிற்கு கால்நடையாக வந்தார்.
- தங்கியிருந்தது : அபயகிரி விகாரையில் 2 வருடம்
- அறியத்தரும் விடயம் : அநுராதபுரகால பௌத்த மேன்மை

ii. ஹியுங்சாங்

- நாடு : சீனா
- வருகை தந்த விதம் : தலயாத்திரையாக

iii. ஜோவாவோ ரிபைரோ

- நாடு : போர்த்துக்கல்
- வருகை தந்த விதம் : போர்த்துக்கேய இராணுவ வீரனாக (18 வயதில்)
- நூல் : இலங்கைத்தீவின் வரலாற்றுச் சோகக்கதை (1685)
- நூலைப்பெற்றுக் கொண்ட மன்னன் : டொம் பீற்றோ (போர்த்துக்கல்)

iv. பிலிப்பஸ் பொல்தெவுஸ் (மதகுரு)

- நாடு : ஒல்லாந்து
- வருகை தந்த விதம் : ஒல்லாந்தப் படையினருடன் வருகை தந்தவர்

v. றொபேட் நொக்ஸ்

- நாடு : ஸ்கொட்லாந்து
- இனம் : ஆங்கிலேயர்
- வருகை தந்த விதம் : பயணம் செய்த "ஆன்" கப்பல் விபத்துக்குள்ளாகியதால் இலங்கைக்கு கரையை வந்தடைந்தமை.
- தரையிறங்கியது : கொட்டியாரக்கரையில்
- ஆட்சியாளர் : 2ம் இராஜசிங்கன்
- நூல் : An Historical Relation of the Island Ceylon

vi. பர்னாவோடீ.குவாரோஸ் (யேசுசபையின் போதகர்)

- நாடு : போர்த்துக்கல்
- நூல் : Temporal and Spiritual Conquest of Ceylon

vii. தொலமி

- நாடு : அலெக்சாந்திரியா
- இனம் : கிரேக்கர்
- இலங்கையை அழைத்த விதம் : தப்ரபேன்

viii. ஒனிசி கிறிட்டஸ் : அலெக்சாந்தரின் படையின் மாலுமியாக பணியாற்றிய இவர் இலங்கை சென்று மீண்ட இந்தியரிடம் இத்தீவு பற்றி கேட்டறிந்து அச்செய்திகளை கூறியமை.

ix. மெகஸ்தனிஸ் : கிரேக்கரான இவர் மௌரிய பேரரசானது அரண்மனையில் கிரேக்கத் தூதுவனாக பணியாற்றிய போது "இலங்கையின் முத்து பற்றி கூறியமை."

x. இபன்பதுதா
- நாடு : அரேபியா
- வருகை தந்தது : கம்பளைக் காலம் யாழ்ப்பாணத்தை ஆண்ட செகராசசேகரன் வரவேற்று உபசரித்தமை

xi. மார்க்கோ போலோ
- நாடு : இத்தாலி (வெனிஸ் நகரம்)
- சிறப்பு : முதல் முதலில் இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய தேச சஞ்சாரி (1299)

**13. இலக்கிய மூலாதாரங்களின் பயன்களைக் குறிப்பிட்டு விளக்குக.**

★ ஒரு நாட்டின் வெளிநாட்டு உறவுகள் பற்றி அறிந்து கொள்ள உதவும்
- வரலாற்றுக்கால இலங்கையின் ஆட்சியாளர்கள் பலரும் பல்வேறுபட்ட சமயத் தொடர்புகளை வெளிநாடுகளுடன் பேணியுள்ளனர். இந்த வகையில் இத்தகைய வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக அறிந்து கொள்ள இவ் இலக்கிய மூலாதாரங்கள் பெரிதும்உதவுகின்றன. உதாரணமாக சிலப்பதி காரத்தில் இந்தியாவில் சேரன் செங்குட்டுவனால் மேற்கொள்ளப்பட்ட பத்தினி தெய்வ வழிபாட்டிற்கு இலங்கையிலிருந்து கஜபாகு மன்னன் சென்றமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. மேலும் இவ்வெளிநாட்டு இலக்கியங்களின் ஊடாக இலங்கையின் அரசியல், பொருளாதார சமய நிலமைகளையும் அறிந்து கொள்ள இலக்கியங்கள் உதவுகின்றன.

Eg : அனுராதபுர கால பௌத்த மேன்மையை அறிய உதவிய பாஹியன் தேரரின் குறிப்புக்கள்

★ ஒரு நாட்டின் வரலாற்றினை விரிவாகவும் தொடர்ச்சியாகவும் அறிந்து கொண்டு வரலாற்று ஒழுங்குமுறையை பேணமுடியும்

நாட்டின் வரலாற்றை விரிவாகவும் தொடர்ச்சியாகவும் அறிந்து கொண்டு வரலாற்று ஒழுங்குமுறையை பேணுவதற்கு இலக்கிய மூலாதாரங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இந்த வகையில் 2500 ஆண்டு கால வரலாற்றை தொடர்ச்சியாக தருகின்றது. அதே வேளை காலத்தின் கண்ணாடி என்ற அடிப்படையில் குறித்த கால விடயங்களை தெளிவாகவும் விரிவாகவும் அறிந்து கொள்ள உதவும். உதாரணமாக மகாவம்சமானது தொடர்ச்சியாக இலங்கை வரலாற்றை வெளிப்படுத்தும் மூலாதாரமாக காணப்படுகின்றது.

★ வெவ்வேறு காலகட்டங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.
★ ஒரு நூலில் கூறப்பட்ட தகவல்களை இன்னோர் நூலின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்
★ தர்க்க ரீதியான சிந்தனைக்கு அடித்தளமிடும்.
★ காலத்தின் கண்ணாடி என்ற அடிப்படையில் உள்ளதை உள்ளவாறு அறிந்து கொள்ள உதவும்.

**14. தொல்பொருள் மூலாதாரம்**

★ அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்டவைகளுள் வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள்கள், சிலைகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் சிதைவுகள் என்பன தொல்பொருள் மூலாதாரங்களாகும்
★ தொல்பொருட்கள் காபன் 14 ($C_{14}$) எனும் இரசாயனப் பரிசோதனை ஊடாக அதன் கால அளவு தீர்மானிக்கப்படும்.

**15. தொல்பொருள் மூலாதாரங்கள்**

- ★ எழுத்தாவணம்
- ★ நாணயம்
- ★ சிதைவு
- ★ சித்திரம்
- ★ சிற்பம்
- ★ செதுக்கல்

**16. சாசனம் என்பது**

- ★ கருங்கல், கிளி மண் தட்டு, சுவர், செப்புத்தகடு, பொன்தகடு, மரப்பலகை என்பவற்றில் எழுதி வைக்கப்பட்டுள்ளவையாகும்
- ★ சாசனப் பொறிப்புக்கள் கி.மு 3ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 3ம் நூற்றாண்டு வரைக்கும் உள்ள காலத்தில் அதிகம் வெளியிடப்பட்டன.

| எழுத்தாவணங்கள் | உதாரணம் |
|---|---|
| கல்வெட்டு | **கல்பொத்த (கற்புத்தகம்)** இலங்கை கல்வெட்டுக்கள் யாவற்றிலும் மிக நீண்டது, கலிங்கத்தின் சிறப்புக்கள் அரசனுடைய தெய்வீகப் பண்புகள், குடிகள், அரசனுக்கு அடங்கி அமைதியாக நடக்க வேண்டிய அவசியம் என்பனவற்றை கூறுகிறது. |
| செப்புத்தகடு | **பனாகடுவ செப்பு சாசனம்** விஜயபாகுவின் அமைச்சரான அத்வரலியின் தேவர் இதைப் பொறித்தார். இது விஜயபாகுவை இளமைக்காலத்தில் பாதுகாத்து உதவி செய்த சித்தாறும்பி புத்தநாயக என்னும் அதிகாரிகு நன்றிக்கடனாக வழங்கப்பட்ட பரிசுல்களும், சலுகைகளும் பற்றிய ஆவணமாக அமைந்துள்ளது. |
| | **அல்லைச் செப்பேடு** திருகோணமலை மாவட்டத்து அல்லையில் கண்டெடுக்கப்பட்டது, இது நிஸங்கமல்ல மன்னனுக்குரியது. |
| | **ஒறுவல செப்பேடு** ஒறுவலப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இச்செப்பேடு ஆரம்பகால சமூக பொருளாதார தகவல்களை குறிப்பிடுகின்றது. |
| பொன்தகடு | **வல்லிபுரம் பொற்சாசனம்** (வசபன்) வல்லிபுரம் ரன்சன்னச என்று குறிப்பிடப்படும் இது வசபமன்னன் காலத்திற்குரியது. வடபகுதியின் வல்லிபுர பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. வசப அரசனுடைய மந்திரி ரிஷிகிரி என்பவன் அப்பகுதியை ஆட்சி செய்தமையும் அவரால் நிறுவப்பட்ட விகாரை பற்றியும் குறிப்பிடுகின்றது. |
| மரப்பலகை | **எம்பக்க தேவாலயம்** மரத்தூண்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் இது இலங்கை வரலாற்றில் கம்பளை இராச்சியத்தின் மூன்றாம் விக்கிரமபாகு மன்னனால் நிறுவப்பட்டது. |
| களிமண் பொருட்கள் | செங்கல், ஓடு என்பவற்றில் காணப்படும் எழுத்துக்கள். |
| பாத்திரம் | மண்டபம், மற்றும் உலோகப் பாத்திரங்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் |

**17. கல்வெட்டு என்பது**

- ★ கருங்கற்களில் எழுதி வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள்
- ★ தொல்பொருட் சான்றுகளில் கல்வெட்டுக்களே முக்கிய இடம் பெறுகின்றன
- ★ கல்லின் அமைப்பைப் பொறுத்து அவை குகை, குன்று, தூண், சுவர், கல்வெட்டுக்கள் என வகைப்படுத்தப்படும்
- ★ புராதன கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டவை

**18. வரலாற்றை வெளிப்படுத்துவதில் கல்வெட்டுக்களின் முக்கியத்துவம்**

- ★ கல்வெட்டுக்கள் அதிகமானவை குறிக்கும் நிகழ்வுகளின் சமகாலத்தவையாக காணப்படுகின்றமை.
- ★ கல்வெட்டுக்களின் எழுத்துக்கள் இலகுவில் அழியாத் தன்மை கொண்டனவாக காணப்படுகின்றமை.
- ★ சுருக்கமாகவும் நேரடியாகவும் சொல்லவந்ததைக் கூறும் தன்மை காணப்படும் அதே வேளை இலங்கையில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் பிராமிக் கல்வெட்டுக்களே மிகவும் பழமை வாய்ந்தவை
- ★ இலக்கிய மூலாதாரங்களில் தரப்படாத பலவற்றை தந்து வரலாற்றை பூரணப்படுத்தும் தன்மை
- ★ இலக்கிய மூலாதாரங்களின் செய்திகளின் உண்மைத் தன்மையை பரிசீலிக்கவும் உறுதி செய்யவும் உதவுகின்றன.
- ★ இலக்கிய மூலாதாரங்களைப் போல் இடைச்செருகல்கள் காணப்படாத தன்மை.
- ★ இதனாலேயே பொறிப்புக்களை இலக்கிய ஆதாரங்களின் உரைகள் என அழைப்பர்

## 19. கல்வெட்டுக்களின் வகைப்பாடுகள்

| வகை | எழுதப்பட்டது | உதாரணம் |
|---|---|---|
| குகைக்கல்வெட்டு | கற்பீலிகளின் அருகில் எழுதப்பட்டவை | மிகிந்தலை, வெஸ்ஸகிரிய, இசுறுமுனிய, தம்புள்ள |
| குன்றுக் கல்வெட்டு | கற்பாறைகளின் மேல் எழுதப்பட்வை | கடலாதெனிய, ரஸ்ஸவெகர, அலவல ஹமுன பொலன்னறுவைக் கல்விகாரை |
| தூண் கல்வெட்டு | செப்பனிடப்பட்ட கருங்கல் தூண்களில் எழுதப்பட்டவை | கட்டுகஹல்கே, பதுளை |
| சுவர்க் கல்வெட்டு | செப்பனிடப்பட்ட கற்பலகையில் எழுதப்பட்டவை | மிகிந்தலை, கல்பொத்த, தோணிக்கல |
| இருக்கைக் கல்வெட்டு | மலர் ஆசனங்கள் போன்ற பீடங்களில் எழுதப்பட்டவை. | |

**20. பொருளாதார தகவல்கள் பற்றிய விடயங்களை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்கள்**

**i.** தோணிகல கல்வெட்டு

- கீர்த்தி ஸ்ரீ மேவன் மன்னனுடையது (கி.பி 303 – 333) பிடதடஹஸ மெதஹஸ, அகலஹஸ என்ற மூன்று விவசாய போகங்களை குறிப்பிடுகிறது.
- உழுந்து, பயறு, எள் என்பன பற்றி குறிப்பிடுகின்றது.

**ii.** பெரிமியன் குளக்கல்வெட்டு

- வசபமன்னன் காலத்திற்குரியது. தந்தையின் சொத்துப்பிள்ளைக்கு வழங்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுவது.

**iii.** வெஸ்ஸகிரிய கல்வெட்டு

- 4ம் மகிந்த மன்னனுக்குரியது. இது குளங்களில் நீர் பெறும் வயல்கள் விதைக்கப்பட வேண்டியவை பற்றி குறிப்பிடுகின்றது.

**iv.** கொடவாயக் கல்வெட்டு

- துறைமுகவரி அறவிடுதல் பற்றிய தகவல்கள்

**21. சூழல் பாதுகாப்புசார் சட்டங்கள் கொண்ட கல்வெட்டு**

- 3ம் உதயன் - புத்தன்னெஹெல கல்வெட்டு காட்டு மரங்களை வெட்ட வேண்டாம் என குறிப்பிடுகிறது.
- 4ம் மகிந்தன் - அனுராதபுரக்கல்வெட்டு உயர்நிலங்களில் மரங்களை வெட்ட வேண்டாம் என குறிப்பிடுகின்றது.
- 5ம் காசியப்பன் - கொண்டவட்டவான் கல்வெட்டு மரஞ்செடிகளின் முகாமைத்துவத்தில் அரசினால் அமுல்செய்யப்பட்ட சட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது.

**22. 4ம் மகிந்த மன்னனுடைய கல்வெட்டுக்கள்**

★ வெஸ்ஸகிரிய கற்பலகைக் கல்வெட்டு

- இசுறுமுனிய விகாரைக்கும் அதனைச் சூழவுள்ள தோட்டங்களுக்கும் நீர் விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகள் இதில் இடம்பெற்றுள்ளது. மேலும் குளங்களில் நீர் பெறும் வயல்கள் விதைக்கப்பட வேண்டியவை பற்றி குறிப்பிடுகின்றது.

★ மிகிந்தலைக் கற்பலைகக் கல்வெட்டு

- இது விகாரைக்குரிய நிலங்கள், ஒழுங்கு விதிகள், என்பவற்றை மதகுருமார் எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் [illegible]

★ வேவல்கெட்டியக் கல்வெட்டு

- கிராம சபையின் சட்டதிட்டங்கள் பற்றியும், அதை மீறுமிடத்து செலுத்தப்பட வேண்டிய அபராதம் பற்றியும் கூறுகிறது. மேலும் களவுவெடுத்தல் கொலை செய்தல் என்பது தொடர்பாக கொடுக்கப்பட வேண்டிய தண்டனைகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.

**கீழ்வரும் சிறப்புடைய கல்வெட்டுக்களைக் குறிப்பிடுக.**

| சிறப்புக்கள் | கல்வெட்டுக்கள் |
|---|---|
| பெரியது | கல்பொத்த |
| பழமையானது | பிராமி |
| முதலாவது | மிகிந்தலை கல்வெட்டு |
| பிக்குமார் சுகாதாரம் | கல்விகாரை |
| இருமொழி | கடலாதெனிய |
| மும்மொழி | காலி |
| சமஸ்கிருத மொழி | குச்சவெளி |
| சுயசரிதை | கல்பொத்த, பனாகடுவ |

**23. கல்வெட்டுக்களின் ஊடாக அறிந்து கொள்ளக்கூடியவை.**

- ★ விகாரைகளுக்கு வழங்கப்பட்ட கிராமங்கள், காணிகள்
- ★ விகாரைகளின் நிர்வாகம்
- ★ பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்ட அரச கட்டளைகள்
- ★ வர்த்தக நடவடிக்கைகளும் வரி அறவீடும்
- ★ தனிநபர்களின் சேவைகளை பாராட்டுதலும், சுயசரிதையை வெளிப்படலும். .
- ★ பிரதேச ஆட்சியும், நிர்வாக சிறப்புக்களும்
- ★ சட்ட முறைமைகளும், தண்டனைகளும்

**24. ஆரம்பகாலத்தில் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டவை?**

- ★ தாயத்துக்கள்
- ★ சிப்பி
- ★ சோகி
- ★ பெறுமதியான இரத்தினக்கற்கள்

**25. இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மிகப்புராதன நாணயம்**

- ★ கஹபண

**26. இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் சில தருக?**

- ★ உரோம, இந்தியா, சீன, அரேபிய நாணயங்கள்

**27. புராதன கால இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் எவை?**

- ★ கஹபண என்னும் புராண மற்றும் தரண நாணயம்
- ★ யானை மற்றும் சுவஸ்திகா உருவம் பதித்த நாணயம்
- ★ இலஷ்மி உருவம் பதித்த நாணயம்
- ★ "அக" எனும் பொன் நாணயம்
- ★ ஒரு சதுர வடிவிலான பௌத்த சக்கரவர்த்தி உருவத்தைக் கொண்ட செப்பு நாணயம்
- ★ பொலனறுவைக் காலத்தில் "தம்பமஸ" என்ற செப்பு நாணயம்

**28. இலங்கை வரலாற்றில் பின்வரும் சிறப்புக்குரிய நாணய வெளியீடுகளைக் குறிப்பிடுக.**

★ முதல் முதல் தன்பெயர் பொறித்து நாணயம் வெளியிட்டவர் -
  • விஜயபாகு மன்னன்

★ முக்கோணவடிவ தங்க நாணயங்களை வெளியிட்டவர்
  • பராக்கிரமபாகு

★ தன் பெயர் பொறித்த நாணயம் வெளியிட்ட பெண் அரசி
  • லீலாவதி.

★ அதிக தங்க நாணயம் வெளியிட்டவர்
  • பராக்கிரமபாகு

**29. நாணயங்களில் இருந்து எவற்றை அறிந்து கொள்ளலாம்?**

★ நாட்டின் பொருளாதார நிலை, நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம், நாணய பணப்பெறுமதி மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அறியலாம்.

★ நாணயம் செய்யப்பட்ட உலோகம், உலோகத்தின் தன்மை மற்றும் அக்கால தொழில்நுட்பத்தையும், அதன் வளர்ச்சியையும் அறியலாம்.

★ ஆட்சி செய்த மன்னர்களின் அதிகாரப் பரம்பல், வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஆட்சி ஆண்டு முதலியவற்றை அறியலாம்,

★ கால நிர்ணயத்தையும் வர்த்தக நகரங்கள், துறைமுகங்களின் அபிவிருத்தியையும் வர்த்தக நடவடிக்கைகளையும் அறியலாம்.

**30. சிதைவுகள் என்பதால் இனங்காணப்படுவது யாது?**

★ புராதன கால கட்டடங்கள், விகாரை, கற்றூண்கள், குளங்கள், பொய்கைகள் என்பவற்றின் இடிபாடுகளும், எஞ்சியுள்ள பகுதிகளும் ஆகும்.

**31. இலங்கையில் வரலாற்றுப் பெறுமதிமிக்க சிதைவுகள் கிடைக்கப் பெற்ற நகரங்களைக் குறிப்பிடுக.**

- ★ அனுராதபுரம்
- ★ பொலன்னறுவை
- ★ யாப்பகூவ

**32. புராதன கால சிதைவுகளிலிருந்து எவற்றை அறிந்து கொள்ளலாம்?**

- ★ முற்கால மக்களின் கலையார்வம், கலையாற்றல்.
- ★ தொழில்நுட்ப அறிவு
- ★ கட்டடக்கலை அல்லது வாஸ்துக்கலைத் திறன்
- ★ சுற்றாடல் பாதுகாப்பு / சூழல் முகாமைத்துவம்
- ★ நீர் முகாமைத்துவம்

**33. கலைப்படைப்புக்களினூடாக எவற்றை அறிந்து கொள்ளலாம்?**

- ★ முன்னோர்களின் ஆடை அணிகலன்கள் ஆபரண வகைகளை அறிந்து கொள்ளலாம்.
- ★ அலங்கார கலை நுட்பம்
- ★ சமய நம்பிக்கைகள்
- ★ மனிதனால் மதிக்கப்பட்ட அம்சங்கள்
- ★ கலையாக்கங்களில் பயன்படுத்தப்பட்ட பாறைவகைகள் நிர்மாணங்களின் போதான தொழில்நுட்பவியல்
- ★ வெளிநாட்டுத் தொடர்புகள்

**34. இலங்கையின் வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் தொல்பொருள் சான்றுகளின் முக்கியத்துவங்களைத் தருக?**

★ தொல்பொருள் அகழ்வுகள் மூலம் பெறப்படும் கட்டடச் சிதைவுகள், சின்னங்கள், சிதைவுகள், கலையம்சங்கள் முதலானவை வரலாற்றுக்கு உறுதியையும் பலத்தையும் அளிக்கின்றன.

★ தொல்பொருள் மூலாதாரங்கள் வரலாற்று நிகழ்வின் சமகாலத்தவையாக விளங்குகின்றமை

★ தொல்பொருள் மூலாதாரங்கள் வரலாற்று நிகழ்வின் தன்மையானவைகளாக விளங்குவதால் வரலாற்றினை கட்டியெழுப்பலாம்.

★ இலக்கிய மூலாதாரங்களிலுள்ள குறைபாடுகளை திருத்திக் கொள்ளமுடியும்

★ பண்டைய மக்களின் பல்வேறுபட்ட திறமைகள், ஆற்றல்கள், பண்டைய கலாச்சாரம், தொழில்நுட்பம், முதலானவை பற்றி அறிந்து கொள்ளலாம்.

★ புராதன கால மக்களின் வாழ்க்கை முறைமைபற்றி அறிந்து கொள்ளலாம்.

★ வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி அறியலாம்

★ இலக்கிய மூலாதாரங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றமை.
உதாரணம் : நாணயம்

**35. வரலாற்றைக் கற்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?**

★ தான் வாழும் சமூகம் மற்றும் உலகம் பற்றிய புரிந்தணர்வைப் பெறவும், சர்வதேச ரீதியில் தோன்றும் பிரச்சினைகளை சமநிலையில் நோக்குவதற்கும் ஏற்ற மனப்பாங்கை பெற முடியும்.

★ இறந்தகால அனுபவங்கள் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்து எதிர்காலத்தைச் சிறப்பாக திட்டமிடவும், காலம், சந்தர்ப்பம் பற்றிய கருத்துக்களையும் தர்க்க ரீதியான சிந்தனைகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

★ தேச அபிமானம் நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளவும், நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளவும் முடியும்.

★ ஏனைய கலாச்சாரத்தின் தனித்துவங்களை மதிக்கும் பண்பையும், எமது பண்பாடு, பாரம்பரியங்கள் பற்றிய விழிப்புணர்வையும் பெறவும் முடியும்.

★ வேறுபட்ட பல்வேறு கருத்துக்களைச் சகித்துக் கொள்ளவும், எதிர்கால தலைமைத்துவத்தை ஏற்கும் நிலையையும், உருவாக்க முடியும்.

**36. தொல்பொருள் மூலாதாரங்கள் இன்று அழிவடைவதற்கான காரணங்கள் எவை?**

★ நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- நாடுவேகமாக பல துறைகளிலும் அபிவிருத்தி அடைவதனாலும் சனத்தொகையின் துரித வளர்ச்சிக்கேற்ப குடியேற்றங்களின் பரம்பலினாலும், பெருந்தெருக்கள் அமைக்கப்படுதலாலும், புதிய கட்டடங்கள் அமைக்கப்படுதலாலும் விவசாய நடவடிக்கைகளாலும், பெறுமதி மிக்க பெரும்பாலான தொல்பொருள் சின்னங்கள் அழிவடைந்து போகலாம்.

★ மக்களின் தவறான கருத்துக்கள்

- புராதன கால அடையாளச் சின்னங்கள், கற்றூண்கள், தொல்பொருட்கள் காணப்படும் இடங்களில் பொருளாதார ரீதியலான பெறுமதியான பொருட்கள் புதைந்திருக்கலாம் என்ற தவறான கருத்துக்களால் அத்தகைய இடங்களை சட்ட விரோதமாக அகழ்ந்து நாசமாக்கு கின்றமையால் தொல்பொருள் மூலாதா ரங்கள் அழிவடைந்து போகலாம்.
- வரலாற்றுச் சின்னங்களின் மீது எழுதுதல், வரைதல், கிறுக்குதல் செயற்பாடுகளாலும் அழிவடைந்து போகலாம்.

37. கீழே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

1.



A


- படம் A யினால் இனங்காணப்படுபவர் குளௌடியஸ் தொலமி ஆவார்.
- அவர் கி.பி 90 தொடக்கம் 168 வரையான காலப்பகுதியில் வாழ்ந்தார்.
- பூகோள சாஸ்திர பிரவேசம் எனும் நூலினை படைத்தவர்.
- இவருடைய சிறந்த படைப்பாக முதல் முதலாக உலகப்படம் வரைந்தமையே காணப்படுகின்றது.
- இவர் இலங்கை 'தப்ரபேன்' என அழைத்தார்.

2.



B

- படம் B யினால் அறியப்படுப்பது பனாகடுவ செப்புசாசனம் ஆகும்.
- இது 1ம் விஜயபாகு மன்னன் காலத்தில் எழுதப்பட்டது.
- இதனூடாக 1ம் விஜயபாகுவிற்கு உதவிசெய்த சித்தாறும்பி புத்தநாயக்க என்பவருக்கு மன்னன் வழங்கிய பரிசுல்களும், சலுகைகளும் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளலாம்.
- இது கி.பி 11 தொடக்கம் 12ம் நூற்றாண்டு கால வரலாற்றை அறிய உதவும்.

3. 

C

- படம் C யினால் இனங்காணப்படுவது கல்பொத்தக் கல்வெட்டு ஆகும்.
- இது இலங்கையில் மிக நீளமான கல்வெட்டாக கருதப்படுகிறது.
- இதனை பொலன்னறுவையின் ஆட்சியாளர் நிசங்கமல்ல மன்னன் உருவாக்கினார்.

4. 

D

- படம் D யினால் இனங்காணப்படுவது குதிரைத்தலையும், மனிதனும் ஆகும்.
- இது இசுறுமுனிய விகாரையில் காணப்படுகிறது.
- அநுராதபுரக்காலத்தில் (கி.பி 7 or 8) தேவநம்பியதீச மன்னனால் நிறுவப்பட்டது.
- இது பல்லவக் கலைமரபை அடியொற்றி நிர்மாணிக்கப்பட்டது.

5. 

E

- படம் E யினால் இனங்காணப்படுவது மத்தியகால தங்கநாணயம் ஆகும். (கஹவனு)
- இது தங்க உலோகத்தால் செய்யப்பட்டது.
- இதனூடாக புராதனகால பொருளாதார் முறை மற்றும் தொழினுட்ப அறிவினை அறிந்து கொள்ளலாம்.

# அலகு – 02

# இலங்கையின் குடியேற்றங்கள்

**01. இலங்கையின் மனித வரலாறு கலாசார பண்புகளுக்கேற்ப பிரிக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.**

- ★ வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
- ★ முன் வரலாற்றுக்காலம்
- ★ வரலாற்றுக் காலம்

**02. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது**

- ★ இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் காலத்திற்கு முன்னைய காலம் என பொதுவாக அழைக்கப்படும்
- ★ நீண்ட காலம் நிலைத்திருந்த கற்காலம்
- ★ 125,000 தொடக்கம் கி.மு 1800 வரையான காலம்
- ★ தொழினுட்ப ரீதியில் இது கற்காலமாகும்.
- ★ இக்காலப் பகுதிக்குரிய கற்பாண்டங்கள் இரத்தினபுரிக் கலாசாரம் என அறிமுகப்படுத்தப்படுகிறது.

**03. வரலாற்றுக்கு முற்பட்டகால / கற்காலத்துக்குரிய ஆதாரங்கள் கிடைத்த பிரதான இரு இடங்களும் எவை?**

- ★ இரத்தினபுரியும் அதன் அயற்சூழலில் உள்ள இரத்தினக் கல் சுரங்கங்களுமாகும்
  - ஈரவலய மலைப்பாங்கான பிரதேசம்
  - இரத்தினக் கனியப் படிவுகளில் காணப்படும் சரளைக் கற்களுடன் கூடிய மண் படைகளில் புராதனகால மனிதன் பயன்படுத்திய கல்லாயுதங்களும், இல்லாது ஒழிந்து போன சில விலங்குகளின் எலும்புகளும் புதைந்துள்ளன.
  - இவை பிளைத்தோசின் காலத்தில் மண்ணில் புதையுண்டன.
- ★ அதிவரண்ட வலயத்தின் இரணைமடுப் படிவுகள்
  - அதிவரண்ட வலய களிமண்ணுடன் கூடிய மணல் மண்களினால் மூடப்பட்ட சரளைப் படிவுகள் காணப்படுகின்றன.

**04. இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்து வந்துள்ள சுற்றாடல் வலயங்கள்**

- ★ தாழ்நில அதிவறள் வலயம்
- ★ தாழ்நில குறைவறள் வலயம்
- ★ தாழ்நில உலர்வலயம்
- ★ தாழ்நில இடை உலர் வலயம்
- ★ மலைநாட்டு இடை உலர் வலயம்
- ★ தாழ்நில இடை ஈரவலயம்
- ★ மலைநாட்டு ஈரவலயம்
- ★ உயர் மலைநாட்டு ஈரவலயம்

Note: மழைவீழ்ச்சி வேறுபாட்டுக்கிணங்கவே இவ்வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

**05. இரணைமடுப்படிவிற்குரிய சரளைக் கற்படிவில் கற்காலத்துக்குரிய ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ள காலகட்ட இடங்கள் எவை?**

- ★ அம்பாந்தோட்டை
- ★ பதிராஜ வெல - 125, 000 வருடங்கள்
- ★ பூந்தல வெல்லேகங்கொட - 80, 000 வருடங்கள்
- ★ பெல்லன் பதி பெலஸ்ஸ - 12, 000 வருடங்கள்
- ★ கித்துள்கல பெலிலென - 15, 000 வருடங்கள்
- ★ குருவிட்ட பட்டதொம்பலென - 28, 000 வருடங்கள்
- ★ புலத் சிங்கள பாகியன் கல - 38, 000 வருடங்கள்
- ★ அத்தன கொட அலுலென - 10, 350 வருடங்கள்
- ★ சீகிரியா பொத்தான- 5, 800 வருடங்கள்
- ★ மானியம் - 7, 900 வருடங்கள்
- ★ சீகிரிய அலிகல - 5, 500 வருடங்கள்

**06. கற்கால மனிதர்கள் குடியிருப்புக்களின் அமைவிடங்களை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொண்ட விடயங்களைக் குறிப்பிடுக.**

★ உணவு கிடைக்ககூடிய இடங்கள்

- வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் உணவைப் பெறக்கூடிய இயற்கை வளங்கள் உள்ள இடங்களான மழைக்காடுகள், புல்நிலங்கள், களப்புக்கள் போன்ற இடங்களில் வாழ்ந்துள்ளான். ஏனெனில் அங்கு இக்கால மனிதனுக்கு தேவையான உணவுகள் இலகுவில் கிடைத்தமை.

★ நீர்த்தேவையை பூர்த்தி செய்யக் கூடிய இடங்கள்

- வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்கள் தமது வாழ்க்கைக்கும், உயிர் வாழ்வதற்கும் அவசியமான நீர் கிடைக்கும் இடங்களிலே தம் வசிப்பிடத்தை தெரிவு செய்தார்கள்.

★ பாதுகாப்பு பெறக்கூடிய இடங்கள்

- இயற்கையான சக்திகளான மழை, வெய்யில் போன்றவற்றின் தாக்கங்களிற்கு ஏற்ப அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்கில் கற்குகை, வெட்ட வெளிகளை தேர்வு செய்தமை

★ கல்லாயுதத்திற்கு தேவையான வளங்கள் கிடைக்கும் இடங்கள்

- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தங்களது அன்றாட கருமங்களை ஆற்றுவதற்கு தேவையான கல்லாயுதங்கள் செய்வதற்கு தேவையான வளங்கள் தாராளமாக கிடைக்கும் இடங்களும் குடியுருப்புக்களின் அமைவிடங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

**07. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த இடங்கள்**

1. கரையோர வெட்ட வெளிகள் - மினிஹாகல்கந்த, புந்தல, பதிராஜவெல

2. தாழ்நில ஈரவலயக் குகைகள் - பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துள்கல, பெலிலென

3. தாழ்நில உலர்வலயக் குகைகள் - சீகிரிய பொத்தான, அலிகல

4. தாழ்நில உலர் வலய வெட்ட வெளிப்பாசறை - பெல்லன் பதிபெலஸ்ஸ

5. மலையகப் பிரதேச வெட்ட வேட்டை நிலங்கள் - பண்டாரவளை, ஹோட்டன் சமவெளி (மஹாலிய)

**08. வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் வாழ்க்கை முறைமை எத்தகையது?**

★ வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலும் பிரதான தொழில்

- அலைந்து திரிந்து உணவு சேகரிக்கும் வாழ்க்கை முறைமைக்கு பழக்கப்பட்ட இவர்கள் உணவைத் தேடுவதற்காக ஒரு நாளைக்குச் சுமார் 7km தூரம் நடந்துள்ளனர். நாடோடி வாழ்க்கை முறையினூடாக வேட்டையாடுதலையும் மேற்கொண்டுள்ளனர்.

★ மழைவீழ்ச்சி அதிகரித்த காலப்பகுதியில் கற்குகைகளிலும், வரண்ட காலப்பகுதியில் வேட்டையாடும் பொருட்டு திறந்த வெளிகளிலும் வாழ்ந்தனர். கற்குகைகளில் தற்காலிகமாகவே வாழ்ந்தனர்.

★ சிறிய சமூக குழுக்களாக வாழ்ந்தமை
- பொதுவாக ஒரு குழுவில் 15 - 25 இடையிலான நபர்கள் அடங்கியிருந்தனர்.
- அவ்வாறான குழுவில் ஆகக் கூடுதலாக 50 நபர்கள் அடங்கியிருந்தனர். சுமார் ஐந்து நபர்களைக் கொண்ட ஒரு குடும்பம் வாழ்வதற்கு 50 சதுரமீற்றர் பரப்பளவிலான இடம் போதுமானதாக இருந்தது.

உதாரணம் :
1. பண்டாரவளை சேர்ச்ஹில் எனும் இடத்தில் 150 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவில் சுமார் 25 நபர்கள் வாழ்ந்தமை.
2. பெல்லன் பதிபெலஸ்ஸவில் கற்காலத் திற்கான 120 சதுர மீற்றர் பரப்பில் 30 மனித என்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டமை.

★ இறந்து போன உறவுகளின் சடலங்களைக் கற்குகைகளில் புதைத்தமை.
- கம்பினாலோ, மிருகக்கொம்பினாலோ குழி தோண்டி சடலத்தை அதனுள் வைத்து சருகுகளினால் மூடியுள்ளனர்.

உதாரணம் :
1. கித்துல்கல பெலிலென பிரதேசத்தில் 12 எலும்புக்கூடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
2. பெல்லன் பெதிபலஸ்ஸவில் கற்காலத்துக்கான 30 எலும்புக்கூடுகள் கிடைத்தமை
3. பாகியன்கல குகையில் 09 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டமை.

**09. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்களின் உணவுப் பழக்க முறைமை எத்தகையது?**

★ வேட்டையாடி உணவுகளை உட்கொண்டமை

- வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் நாளாந்தம் நாடோடிகளாக அலைந்து திரிந்து மாடு, காட்டெருமை, கரடி, காட்டுப்பன்றி, மான் ,மரை, சிறுமான், முள்ளம்பன்றி, முயல், மரஅணில், கீரி, குரங்கு, காட்டுக்கோழி, மலைப்பாம்பு, உடும்பு முதலானவற்றை வேட்டையாடி வந்துள்ளனர்.

★ நன்னீர் மீனினங்களையும் தாழ்நில ஈரவலயத்தில் வாழும் நத்தைகளையும் உட்கொண்டமை.

- இங்கு பிரதானமாக மனிதன் வாழும் சூழலுக்கு ஏற்ப தனது உணவுப் பழக்கத்தை கற்கால மனிதன் அமைத்துக் கொண்டான்.

  உதாரணம் : 1.தாழ்நில ஈரவலய நீர்ப் பரப்புகளில் காணப்பட்ட "தித்தியா" போன்ற நன்னீர் மீனினங்கள் உட்கொண்டமை.

  2.ஈரவலய மனிதன் நத்தைகளை தனது உணவாக ஆக்கிக் கொண்டமை.

★ தாவர உணவுகளை உட்கொண்டமை.

- காட்டு வாழை, காட்டுப்பலா (ஆசனிப்பலா) என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளன. 12 500 வருடங்களுக்கு முன் காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் இயற்கையாக கிடைத்து வருகின்ற வள்ளிக்கிழங்கு, கித்துள் விதை, காட்டுப்பாக்கு என்பனவும் உணவாக உட்கொள்ளப்பட்டுள்ளன.

★ உணவுப் பண்டங்கள் தீயில் சுடப்பட்டமையும் உணவில் உப்பும் பயன்படுத்தியமையும்

- உணவுக்கான உப்பை பெறுவதற்காக நாட்டின் உட்பகுதியில் வாழ்ந்த மக்கள் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டி இருந்தது.

  உதாரணம் : 1. கித்துள்கல பெலிஸெனவில் கண்டெடுக்கப்பட்ட நத்தைகளின் எச்சங்கள் கடற்கரைப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட உப்புடன் கலந்திருந்தமை.

**10. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் தொழினுட்பமுறை**

★ கேத்திர கணிதப் பொறிமுறை உருவிலான நுணுக்கமான கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டமை.

- இவை கற்பாறைகளைக் கொண்டு செப்பனிடப்பட்டு உருவாக்கப்பட்டிருப்பதாகும். இத்தகைய கல்லாயுதங்கள் 4.5cm அளவிற்குட்பட்டவையாகும். பளிங்குப் பாறைகளினாலும் சிறியளவில் மஞ்சள் நிறப்பளிங்குக் கற்களினாலும் இந்த நுணுக்கமான கல்லாயுதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

★ பல்வேறு செயல்களுக்காக உபகரணங்களைப் பயன்படுத்தியமை.

- வேட்டையாடுதல் முதல் கொண்டு வெட்டுதல்,உராய்தல், தட்டையாக்குதல், தோண்டுதல் என்பவற்றிற்கு ஏற்றாற் போல செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தியமை.

★ தேவைகளை நிறைவேற்ற பயன்படுத்திய ஏனைய கருவிகளும் ஆபரணங்களும்

- கருங்கல் மூலம் தட்டையான சுத்தியல் அம்மி போன்றவை செய்யப்பட்டமை.
- மரக்கோல்கள், விலங்கு என்புகள், கற்கள் போன்றவற்றால் உபகரணங்கள் செய்யப்பட்டமை.
- பாகியன்கல குகையில் கற்கால மனிதனால் பயன்படுத்தப்பட்ட சிப்பியானாலான அட்டியல் கண்டுபிடிக்கப்பட்டமை. மற்றும் கருங்கல் மூலம் தட்டையான சுத்தியல் அம்மி போன்றவையும் உருவாக்கப்பட்டுள்ளமை.

**11. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதனின் உடலமைப்பு**

★ சாதாரண வளர்ச்சியடைந்த மனிதனின் உயரம் 174cm

★ வளர்ந்த பெண்ணொருவரின் ஆகக்கூடிய உயரம் 166cm

★ பற்கள் பெரியனவாக இருந்தமை

★ அகன்ற மூக்கும் அகன்ற நாடியும் இருந்தமை

★ வளர்ந்த ஆண் ஒருவரின் மூளையின் அளவு 1600cm

★ வளர்ந்த பெண்ணொருவரின் மூளை $920cm^3$ ஆகம

★ இக்கால மனிதனின்ஆகக் கூடிய ஆயுட்காலம் 35 - 40 வயதாகும்

**12. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் சடங்கு சம்பிரதாய முறைமை**

★ மண்டையோட்டை துளையிட்டு மரணச்சடங்கை மேற்கொள்ளல்

- பதுளைக்கு அண்மையில் அமைந்துள்ள இராவணன் எல்ல குகையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டை யோட்டின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது குறித்த மக்களின் நம்பிக் கைகளின் அடிப்படையில் ஒருவருக்குள் காணப்படும் பொருத்தமற்ற நடத்தைக்கு காரணமாக விளங்கும் அசுத்த ஆவியை வெளியேற்றும் நோக்கில் இவ்வாறு துளையிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

★ சதை உக்கிப் போன பின்னர் எலும்புக்கூட்டை வளைத்துப் புதைத்தல்

- நண்பரோ உறவினரோ இறந்துவிட்டால் இறந்தவரின் சடலம் உக்கிப்போகுமளவிற்கு புதைத்து வைத்திருந்து பின்னர் எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டு அது பாதுகாப்பான முறையில் நல்லடக்கம் செய்யப்படுகின்றது.

  உதாரணம் : 1. குருவிட்டபட்டதொம்பலெனக் குகையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு

- செந்நிறப் பூச்சுக்களை மேற்கொண்டு மரணச்சடங்கு மேற்கொள்ளல்

**13. முன் வரலாற்றுக் காலம்**

- ★ முன் வரலாற்றுக் காலம் என்பது வரலாற்று உதயகாலம் எனவும் அழைக்கப்படும்.
- ★ வரலாற்றுக்கு முற்பட்ட கால முடிவிற்கும், வரலாற்றுக்கால ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலமே முன் வரலாற்றுக்காலம் ஆகும்.
- ★ கி.மு 2400 தொடக்கம் 450 வரை நிலவியது
- ★ தொழினுட்ப அடிப்படையில் இது இடைக்காலமாகும்.
- ★ வரலாற்றுக்கு முற்பட்ட கால கல்லாயுத தொழினுட்பத்திற்கு பதிலாக இரும்பு உலோகப் பாவனை இக்காலப் பகுதியில் ஆரம்பமாகியது
- ★ இக்காலத்தின் இறுதியிலேயே கல்லாயுதங்கள் முழுமையாக கைவிடப்பட்டன.
- ★ இரும்பின் பாவனை ஆரம்பிக்கப்பட்டமையால் இக் காலம் முன் வரலாற்று இரும்பு யுகம் எனவும், ஆரம்ப இரும்பு யுகம் எனவும் அழைக்கப்படுகிறது.

**14. முன் வரலாற்று கால குடியிருப்புகளின் இயல்புகள்**

- ★ தாவர உணவுக்கு பழக்கப்படுதல்
- ★ உலோகப் பாவனையின் ஆரம்பம்
- ★ சிறப்பான கல்லறை நிர்மானங்கள் முறையான மரணச்சடங்கு
- ★ சுடப்பட்ட களிமண் பாத்திரங்களின் பாவனை
- ★ நிலையான குடியேற்றம்
- ★ விவசாயம் செய்தமை

**15. முன் வரலாற்று காலத்துக்குரிய ஆதாரங்கள் கிடைக்கப்பட்ட இடங்கள் யாவை?**

★ சப்ரகமுவ மாகாணத்தின் வடகிழக்குப் பகுதி

★ ஊவா மாகாணத்தின் தென்மேற்குத் திசை உள்ளிட்ட 50 இடங்கள்

**16. முன் வரலாற்றுக் காலம் - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபட்டமைக்கான ஏதுவான பிரதான காரணம்**

★ காலநிலை மாற்றம்

**17.**

| வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | முன் வரலாற்றுக் காலம் |
|---|---|
| நாடோடி வாழ்க்கை | நிலையான வாழ்க்கை |
| கற்கருவிகள் பயன்படுத்தல் | இரும்பினாலான கருவிகள் பயன்படுத்தல் |
| பிரதான தொழில் வேட்டையாடல் | பயிர்ச்செய்கை மேற்கொள்ளல் |
| கற்குகையும் வெட்ட வெளியும் வாழிடம் | நிரந்தர வீடுகள் வாழிடம் |
| மாமிச உணவு முக்கியம் பெற்றமை | தாவர உணவு முக்கியம் பெற்றமை |
| மரணித்தவர்களின் உடல்கள் கற்குகைகளில் புதைக்கப்பட்ட பின்பு எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டமை | மரணித்தவர்களின் அஸ்தி மயானங்களில் புதைக்கப்பட்டமை. |

**18. கி.மு 5000 - 4000 காலப்பகுதியில் தென் ஆசிய வலயம் முழுவதும் மாற்றத்துக்குள்ளாக காரணமான புவியியல் மாற்றம் யாது?**

★ ஹெலோசீன் யுகம்

**19. முன் வரலாற்றுக்கால மயானங்கள் / மரணச்சடங்கு பற்றிய விடயங்களை குறிப்பிடுக.**

★ கல்லறை மாயனம்

- பாரிய கற்களை ஒன்று சேர்த்து சதுர வடிவில் கட்டப்பட்ட மயானம்

  உதாரணம்

- தம்புள்ளைக்கு அண்மையில் இப்பன் கட்டுவ யாப்பகூவவிற்கு அண்மையில் கல்சொஹன், கலவேலைக்கு அண்மையில் பாட்டிகல் பொத்த
- இங்கு சடலங்கள் எரிக்கப்பட்டு பெறப்பட்ட அஸ்தி மட்பாண்டங்களில் வைத்து பாதுகாக்கப்பட்டிருந்தன.
- இவை கி.மு 750 - 450 கால கட்டத்திற்குரியது
- காலத்தால் முந்திய மயானம்
- அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்

★ புதைகுழி மயானம்

- களிமண் பாத்திரங்களில் பாதுகாக்கும் அஸ்தி குழி தோண்டி புதைக்கப்பட்ட மயானம்

★ களி மண் ஓட மயானம்

- பச்சைக் களிமண்ணால் ஓடம் போன்ற வடிவில் உருவாக்கப்பட்ட மயானம்
- குறித்த ஓட மயானத்திற்குள் வைத்தே சடலங்கள் எரிக்கப்படும்.

  உதாரணம்

- ஊவா மாகாணம் ஹல்துமுல்ல
- ஊவா மாகாணம் பெரகல
- உடரஞ்சாமட மயானம்

Note : களிமண் ஓட மாயனங்களுக்கு சமனானதாகவும் அதே வேளை கல்லறை மயானங்களின் காலகட்டத்திற்குரிய வையாகவும் காணப்படும் மயானங்கள் ருவன்வெல்ல நிகவல்லமுல்ல மற்றும் அத்தனகல்ல கல்வெட்டுவாவ.

**20. முன் வரலாற்றுக்கால குடியிருப்புகளின் தன்மை**

★ 2009 ம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள உரஞ்சாமடம் கிராமத்தில் வீடொன்றின் எச்சம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அது 10.20 x 6.80 அடி சதுர மீற்றர் அளவுடையதும் செவ்கை வடிவம் கொண்டதுமாகும்.

★ அதன் முன் பக்கமும் பின் பக்கமும் சுவரால் பிரிக்கப்பட்டிருந்தது. வீட்டின் சுவர் மண்ணால் கட்டப்பட்டிருந்ததுடன், கூரை இலுக்புல் அல்லது அதை ஒத்த பொருளினால் வேயப்பட்டிருக்கலாம். இக்குடியிருப்பு கி.மு 1129ல் அமைக்கப்பட்டதாக விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்டுள்ளது.

★ வரிச்சுவர் வீடுகள் அமைக்கப்பட்டமை.

★ வீட்டின் உட்புறம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டமை, மற்றும் வீட்டுக்கதவும் பொருத்தப்பட்டிருந்தமை.

**21. முன் வரலாற்றுக்கால மக்களின் வாழ்க்கை முறைமை எத்தகையது?**

★ நிரந்தரமானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான வீடுகளின் ஊடாக குடியிருப்பு நிறுவியமை.

- 2009ம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள உரஞ்சாமடம் கிராமத்தில் வீடொன்றின் எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது 10.20 x 6.80 அடி சதுர மீற்றர் அளவுடையதும் செவ்வக வடிவம் கொண்டதுமாகும்.
- அதன் முன் பக்கமும் பின் பக்கமும் சவரால் பிரிக்கப்பட்டிருந்தது. வீட்டின் சுவர் மண்ணால் கட்டப்பட்டிருந்ததுடன், கூரை இலுக்புல் அல்லது அதை ஒத்த பொருளினால் வேயப்பட்டிருக்கலாம். இக்குடியிருப்பு கி.மு 1129ல் அமைக்கப்பட்டதாக விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்டுள்ளது.

★ தேவைகளை நிறைவேற்ற மட்பாத்திர பயன்பாடு

- உடரஞ்சாமடத்தில் 3129 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த வீட்டினுள் மட்பாண்டத்துண்டுகள் பலவும் கிடைத்துள்ளன. அவற்றுள் நிறந்தீட்டப்பட் "மடக்கு" என்றழைக்கப்படும் ஒரு பாத்திரத்தின் துண்டுகள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். வெள்ளைநிறப் பின்னணியில் சிவப்பு நிறக்கோடுகள் மூலம் அப்பாத்திரத்தின் வெளிப்புறம், கீழ்ப்புறம் அலங்கரிக் கப்பட்டுள்ளது. அக்கோடுகள் சம அளவு இடை வெளியில் அமைந்துள்ளமையானது. மட்பாண்டம் அச்சு மூலம் வடிவமைக்கப்பட்டமை உறுதிப்படுத்துகின்றன.
- இது போன்றதொரு பாத்திரத்தின் சிதைவுகள் ஹல்துமுல்ல குடியிருப்பொன்றின் அகழ்வு களிலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

★ சமையலறை உபகரணப் பயன்பாடு

- அகழ்வாய்வு செய்த வீட்டில் சமையலறை உபகரணங்கள் சிலவும் கிடைத்துள்ளன. அவற்றுள் அதிகமானவை கல்லாயுதங்களாலும் வேட்டையாடிய விலங்குகளின் எலும்புகளுமே கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இதனடிப்படையில் இவர்களுக்கு இரும்பு பாவனை புதிய அனுபவமாக காணப்பட்டது எனலாம்.

★ விவசாய வாழ்க்கையை முன்னெடுத்தமை

- விவசாய வாழ்க்கையை மேற்கொண்ட போதிலும் அவர்கள் வேட்டையாடுவதை முற்றிலும் நிறுத்த வில்லை என்பது குடியிருப்பு ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்ட விலங்குகளின் எலும்பு எச்சங் களிலிருந்து அறியலாம்.

★ பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் அதிக அக்கறை காட்டியமை.

- வீடொன்றில் கிடைக்கப் பெற்ற பொருட்களான களிமண் மணிகளும் பெண்கள் கண்மையிடப் பயன்படுத்திய உலோகத்திலான குச்சி ஒன்றும் உடம்பில் வர்ணம் பூசுவதற்கு பயன்படுத்தப்பட்ட மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்திலான இரு பூசு கற்களும் அவற்றை உராய்வதற்காக பயன்படுத்தப்பட்ட அரைக்கும் கற்கள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டமை யினூடாக புராதனகால பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டியமையை அறிந்து கொள்ளலாம்.

**22. இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட தொழில்நுட்ப முறைகள் யாவை?**

★ உலோகப் பயன்பாடு ஆரம்பமாதல்

- கல்லாயுத தொழில்நுட்பத்திலிருந்து இரும்பு உலோக தொழினுட்பத்திற்கு பழக்கப்பட்டமையால் விவசாய த்திற்கு தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்து கொண்டு வேலைகளை எளிதாக்கியமை

  உதாரணம் : காடுகளை அழித்தல்

  உழுதல், நிலத்தை பண்படுத்தல்

★ மட்பாண்டங்களை அமைக்கும் முறைமை

- உடரஞ்சாமட குடியில் கண்டெடுக்கப்பட்ட நிறந் தீட்டப்பட்ட மட்பாண்டம் அவர்களுடைய கலையார் வத்தையும் தொழினுட்பத்தையும் வெளிப்படுத்துகிறது.

★ தொழிநுட்ப முறையிலான வீடுகள் அமைக்கும் முறைமை

- மழைக்காலங்களில் வீடுகள் கீழிறங்காமல் இருக்கும் பொருட்டு பொருத்தமாக அடித்தளம் அமைக்கும் முறைமை, கதவுகளை முறையாக அமைத்தல் என்பன காணப்பட்டமை.

  உதாரணம் : உடரஞ்சா மடம் குடியிருப்பு

★ மணிகள் செய்யும் தொழில் நுட்பம்

- உடரஞ்சா மடத்தில் கண்டெடுக்கப்பட்ட மண்ணாலான மணி

**23. வரலாற்றுக்காலம்**

★ இலக்கிய மூலாதாரங்களால் விவரிக்கப்படும் பண்டைய காலமாகும்

★ கி.மு 450 தொடக்கம் கி.பி 300 வரையிலான காலம்

★ இது வரலாற்று ஆக்க காலம் எனவும் அழைக்கப்படும்

**24. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்தியுள்ள பிரதானிகள் எவை?**

★ புவியியல் பின்னணி

★ வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவு

★ மண்ணின் தன்மை

★ தரைத்தோற்ற வேறுபாடு

★ இயற்கை வளங்களின் பரம்பல்

★ நீரோடைகள்

**25. வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.**

★ மழைவீழ்ச்சிகள்

- வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் உலர் வலயத்திலே குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. விவசாயத்திற்கு மழைநீர் அவசியமாக இருந்தது. இதனால் வடகீழ்ப்பருவக்காற்றின் மூலம் அதிகமாக மழை கிடைத்த இடங்களில், மக்கள் தமது குடியிருப்புக்களை அதிகமாக அமைத்தனர். 1000 - 1250 மில்லி மீற்றர் மழை கிடைத்த உலர்வலயத்தில் அதிகமான குடியிருப்புக்கள் காணப்பட்டன. டிசெம்பர் - பெப்ரவரி வரை இம்மழை பெரும்பாலும் கிடைத்தது. தெதுறு ஓயா, கலாஓயா, மல்வத்து ஓயா, யான் ஓயா, மகாவலிகங்கை, கல் ஓயா, மாணிக்க கங்கை முதலிய நதிப்பள்ளத்தாக்குகளில் மக்கள் வாழ்ந்தனர். 1000 மி.மீ விட குறைவாக மழை கிடைத்த பிரதேசங்களில் (அரை குறைவரள் வலயம்) ஒப்பீட்டளவில் குறைவான மக்களே வாழ்ந்தனர். இதனடிப்படையில் வரலாற்றுக்கால மக்களின் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணியாக மழைவீழ்ச்சியை குறிப்பிடலாம்.

★ மண்ணின் தன்மை

- நீர்ப்பற்றாக்குறை உள்ள உலர் வலயத்தில் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டமைக்கான முக்கிய காரணம் வளமான மண் காணப்பட்டமையாகும். விவசாயத்திற்கு உகந்த செங்கபில நிற மண் உலர் வலயத்தில் காணப்பட்டது. இம்மண் அதிக விளைச்சலைத் தரும் மண்ணாகும். மழை நீரை தேக்கி வைக்ககூடிய இம்மண், வரண்ட பருவத்திலும் ஈரத்தன்மையுடன் காணப்படும். எனவே வரலாற்றுக் காலத்தில் மக்களின் குடியிருப்புப் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய முக்கிய காரணியாக மண்வளம் விளங்கியது.

★ தரைத்தோற்ற வேறுபாடு

- விவசாயம் செய்யக்கூடிய மென்சாய்வான பிரதேசங் களிலும் சமவெளிதரைப் பகுதிகளிலும் மக்கள் அதிகமாக வாழ்ந்தனர். மேலதிக மழைநீர் ஓடிச்சென்று குளங்களில் தேங்கி நிற்பதற்கு மென்சாய்வான சமநிலமே பொருத்தமானது என்பது பிரதானமான காரணமாகும்.

★ இயற்கை வளங்களின் பரம்பல்

- மனிதனின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மண்வளம், நீர்வளம், மிருகவளம் போன்றவை அதிகம் உள்ள இடங்களிலேயே மக்கள் அதிகம் வாழ்ந்தனர்.

★ நீரோடைகள்

- அக்கால மக்கள் நீரோடைகளுக்கு அண்மையில் வாழ விரும்பவில்லை. அதற்கு அப்பால் உள்ள இடங்களில், கிராமக் குளங்கள் இருந்த இடங்களிலேயே வாழ்ந்தார்கள். நீரோடையில் ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இல்லாதிருந்ததே இதற்கு காரணமாகும். திஸ்ஸ மகாராம குளத்தை அமைத்த இளநாகன் மன்னனே கிரிந்தி ஓயாவுக்கு குறுக்கே அணைகட்டி வெள்ளத்தை முதலில் கட்டுப்படுத்தினான்.
- அக்கால மக்கள் கிராமக்குளக்கட்டின் ஓரங்களில் தமது குடியிருப்புக்களை அமைத்தார்கள். கிராமக்குளங்கள் காணப்பட்ட இடங்களிலேயே குடியிருப்புக்களும் பரவியிருந்தன.

**26. இலங்கையின் ஆரம்பகால குடியேற்றங்கள் உலர் வலயப் பகுதிகளில் அமைக்கப்பட்டமைக்கான பிரதான காரணம் யாது?**

★ வளமான மண் காணப்பட்டமை

**27. இலங்கையின் வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் பரம்பியிருந்த பிரதேசங்களை சரியாகக் காட்டும் சுட்டியாக அமைவது எது?**

★ கிராமக் குளங்களின் பரம்பல்

**28. வரலாற்றுக் காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரைப் பெற்றுக் கொண்ட வழிகள்**

★ பருவமழை

★ உலர் வலயத்தில் குளங்களை அமைத்து நீரைச் சேமித்தல்

**29. இலங்கையின் வரலாற்று யுகத்தின் ஆரம்ப காலத்தில் குடியிருப்புக்கள் நதிகளுக்கு அண்மையில் அமைக்கப் படாமைக்கான காரணங்கள் எவை?**

★ வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்த திறனில்லாமை

★ சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டமை

**30. கிரிந்தி ஓயாவிற்கு குறுக்கே அணைகட்டி திஸ்ஸமகாராம குளத்தை அமைத்த மன்னன் யார்?**

★ இளநாகன் (கி.பி 33-43)

**31. அணைக்கட்டுக்கு கல்வெட்டுக்களில் வழங்கும் மறுபெயர் யாது?**

★ அவரண

- குருணாகல் மாவட்டத்து கணேகந்த விகாரை, கல்லென விகாரைகளில் "அவரண" என பொறிக்கப்பட்டுள்ளது.

**32. புராதன காலத்தில் குளத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட குடியேற்றம் எவ்வாறு அழைக்கப்படும்?**

★ வாபிகாம

**33. மகாவம்சத்தின் அடிப்படையில் புராதன காலத்தில் அமைக்க ப்பட்ட "வாபிகாம" எனும் கிராமங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக?**

★ சுமண வாபிகாம

★ விஹார வாபிகாம

★ ஹிந்தரி வாபிகாம

★ கடஹ வாபிகாம

**34. வெவ்வேறு தொழில்களையும், செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு கிராமங்கள் வகைப்படுத்தப்பட்ட விதத்தை காட்டி குறிப்பிடுக?**

| | |
|---|---|
| கசீகாரகாம | விவசாயிகள் வாழும் கிராமம் |
| மணிகாரகாம | இரத்தினம் அகழ்வோர் பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம் |
| கோபாலகாம | இடையர் வாழ்ந்த கிராமம் |
| கேவட்டகாம | மீனவர் வாழ்ந்த கிராமம் |
| கும்பகாரகாம | குயவர் வாழ்ந்த கிராமம் |
| வட்டகீகாம | தச்சர் வாழ்ந்த கிராமம் |
| பட்டானகாம | துறைமுகத்தைக் கொண்ட கிராமம் |
| நியம்கம் | வர்த்தக கிராமம் (சிறு கிராமம்) |
| ஒலகம | கைவிடப்பட்ட கிராமம் |

**35. மக்களால் கைவிடப்பட்ட (ஓலகம) குளக் கிராமங்களின் இருபிரிவுகள்**

★ பரிகித்த கம — வேலியிட்டு பாதுகாக்கப்பட்டிருந்த கிராமம்

★ அபகரிகித்தம — வேலியிட்டு பாதுகாக்கப்படாத கிராமம்

**36. வரலாற்றுக் கால குடியேற்றங்களின் அமைப்பு முறைமைகளின் தன்மை எத்தகையது?**

I. **குடியிருப்புக்களின் கட்டமைப்பு**

★ குடும்பக் கட்டமைப்பு நிலவியமை.

- குடும்பம் என்பது குலம் எனும் சொல்லாலேயே குறிப்பிடப்பட்டது.
- கிராமியப் பொதுப்பணிகளில் ஒவ்வொரு குடும்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக குடும்பத் தலைவர்கள் முன் வந்தார்கள்.
- குடும்பத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது குடும்பத் தலைவனாகும். அவன் "குர்ஹபதி" / ஹகபதி என அழைக்கப்பட்டான்.

★ கிராமியக் கட்டமைப்பு நிலவியமை.

- பொதுவாக கிராமம் ஒன்றில் 5 - 6 குடும்பங்களும், பெரிய கிராமங்களில் 30 குடும்பங்களும் வாழ்ந்தன. நகர்புறக் குடியேற்றங்களில் இந்நிலைமை மாறிக் காணப்பட்டன. கி.பி 6ம் நூற்றாண்டில் மகாகம நகரிலும் அதனை அண்மித்த நகரங்களிலும் குறைந்தது 35, 000 பேர் வாழ்ந்தனர்.
- சில கிராமங்கள் வேலியிட்டுப் பாதுகாக்கப்பட்டன. சில அவ்வாறு பாதுகாக்கப்படவில்லை.
- கிராமத்தில் குடும்பத் தலைவனைக் கொண்ட குழுவின் தலைவன் "கமிக" அல்லது " கிராமிக" என அழைக்கப்பட்டான். இது கிராமத் தலைவனைக் குறிப்பதாகும். பிற்காலத்தில் கிராமத்தலைவர்கள் 10 பேர் சேர்ந்து சபை ஒன்றின் மூலமாக அக் கிராமத்தின் பிரச்சினை தீர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★ நகரம் மற்றும் மாநகரக் கட்டமைப்பு நிலவியமை.

- நகரக் குடியேற்றங்கள் "புரம்" என அழைக்கப்பட்டன.

  உதாரணம் : 1ம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்பேட்டில் அநுராதபுரம்"நுருபுரம்"என அழைக்கப்பட்டது.

- பிராமியக் கல்வெட்டொன்றில் "புரகமத்த" என்னும் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது இது நகர கட்டட கலைஞரைக் குறிப்பதாகும்.
- நகர்புறக் குடியேற்றங்களில் இந்நிலைமை மாறிக் காணப்பட்டன. கி.பி 6ம் நூற்றாண்டில் மகாகம நகரிலும் அதனை அண்மித்த நகரங்களிலும் குறைந்தது 35, 000 பேர் வாழ்ந்தனர்.
- நகர அல்லது நகரம் என்னும் விசேட குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. இது கிராமம் புரம் இரண்டிற்கும் இடைப்பட்ட குடியிருப்பு வகை ஒன்றாகும். அவை அளவில் கிராமத்தை விட சற்றுப் பெரிய குடியிருப்பாக காணப்படும்

II. குடியிருப்புக்களின் தன்மை

★ குளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புக்கள் நிறுவப்பட்டமை.

- இவை வாபி காம என அழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

★ ஒரே தொழிலைச் செய்த மக்கள் இணைந்து குடியிருப்புக்களில் வாழ்ந்தமை.

உ- ம் : கோபால கம - இடையர்கள் வாழ்ந்தகிராமம்

★ காரண கரிய அடிப்படையில் இயங்கிய குடியேற்றங்கள் காணப்பட்டமை

உ - ம் : பட்டான கம - துறைமுகத்தை கொண்ட கிராமம்

★ குடியேற்றங்களின் பரப்பின் அளவுகள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை அளவுகள் குடியேற்றத் திற்கு குடியேற்றம் வேறுபட்டிருந்தமை.

★ பழைய கிராமிய வீடுகள் காணப்பட்டமை.

- அனுராதபுர அகழ்வில் இத்தகைய வீடுகள் சிலவற்றின் அத்திவாரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவை மண் சுவர்களையும், இலை குழைகளையும் கொண்ட கூரையை உடையன. அவ்வீடுகள் சதுர வடிவ அமைப்பினை கொண்டவையாகவும் அமைந்திருந்தன.
- திஸ்ஸமகாராமையில் "வலகமபத்து" என்னும் கிராமத்தில் புராதன வீட்டு எச்சம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நிலத்தைத் தோண்டி அதன் மேல் மண் பூசி அந்த வீட்டின் தளம் அமைக்கப்பட்டது.

**37. வரலாற்றுக்கால மக்களின் ஜீவனோபாய முறை யாது?**

★ சேனைப் பயிர்ச் செய்கை முறை

★ வரட்சிக்கு முகம்கொடுக்கக் கூடிய குரக்கன், மெனேரி எள், கரையரசி முதலானவை நீர் குறைந்த இடத்தில் பயிரிடப்பட்டன.

★ சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப உணவு தேவையை பூர்த்தி செய்ய கிராமக் குளங்கள் நிறுவப்பட்டமை.

# அலகு – 03

# இலங்கையில் அரசியல் அதிகார வளர்ச்சி

**01. இலங்கையை ஆண்ட முதலாவது மன்னன் யார்?**

★ விஜயன்

**02. விஜயன் இலங்கைக்கு வந்த காலப்பகுதி யாது?**

★ கி.மு 6ம் நூற்றாண்டு

**03. அரசு என்றால் என்ன?**

★ ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழ்கின்ற மக்களால் தமக்கான சட்டவாக்கலை மேற்கொள்ளும் நிறுவனமாக பெருவிருப்பின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ளப்பட்ட அமைப்பு

**04. பெரு விருப்பு என்றால் என்ன?**

★ நாட்டின் பெரும்பான்மையினரின் ஆதரவிலேயே அரச அதிகாரம் தங்கியிருக்கிறது. இதனடிப்படையில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெருவிருப்பு எனப்படும்.

**05. இலங்கையின் அரசுகளுக்கு முற்பட்ட காலம் என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?**

★ அரசொன்று தோன்றுவதற்கு முன்பு இலங்கையில் நாட்டை நிர்வகிக்க நிலவிய அமைப்பு முறைமை

**06. இலங்கையின் அரசுகளுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் இருந்த ஆட்சித் தலைவன் யார்?**

★ பருமக

Note : பருமக என்பது பிரமுக என்னும் சொல்லிருந்து பிறந்ததாகும். சிறிய பிரதேசம் ஒன்றில் அவர்கள் ஆட்சி செய்யும் அதிகாரமானது செல்வம், அதனால் கிட்டியபலம் என்பவற்றால் கிடைத்தாகும். (பருமக பிரமுக - பிரதானம்)

**07. பிரதேச நிர்வாக அமைப்பை பருமக கொண்டிருந்தார் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட இடம் எது?**

★ தம்புள்ளைக்கு அருகில் உள்ள கண்டலம என்னும் பிரதேசத்தில் கொத்கல்கந்தையில்.

(250ம் ஆண்டுக்குரியது)

**08. தொட்ட போஜக என்பதன் பொருள் யாது?**

★ படகுத் துறையை நிர்வகிப்பவர்.

**09. தொட்ட போஜக என அழைக்கப்பட்டவர் யாவர்?**

★ பிக்குமார்களுக்கு குகை ஒன்றை அமைத்து தானமளித்த பருமகர்

**10. அரசுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த பிரதேச ஆட்சி அதிகாரிகளாக இருந்தோர் யாவர்?**

★ குடும்பத் தலைவன் / இல்லத்தலைவன் /ஹகபதி

★ கிராமத் தலைவன் / கிராமிக / கமிக / கம்லத்தன்

★ பருமக (பிரதேச ஆட்சியாளன்)

**11. அரச அதிகாரம் வளர்ச்சியடைந்த படிமுறை யாது?**

இல்லத் தலைவன் → கமிக → பருமக → ராஜா

★ இல்லத் தலைவன்

- கி.மு 900ம் ஆண்டில் உலர்வலயத்தில் பரவிய குடியிருப்புக்களின் குடும்ப தலைவர்கள் இல்லத் தலைவர்களாவர்
- குடும்பம் :- குலம் எனவும் அழைக்கப்பட்டது

**12. இல்லத்தலைவன் தொடர்பாக கல்வெட்டு ஆதாரம் கிடைக்கப் பெற்ற இடம் எது?**

★ அனுராதபுரத்தின் பெரிய புளியங்குளம் எனும் இடத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் சுமணவின் குடும்பத்தைச் சேர்ந்த உலோகக் கைத்தொழில் மேற்கொண்ட இல்லத்தலைவன் ஒருவன் பிக்குமாரின் சேமநலம் கருதி கற்குகை ஒன்றை சுத்தம் செய்து தானமளித்ததாக அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**13. இல்லத்தலைவனின் கடமைகளைக் குறிப்பிடுக.**

★ கிராமியப் பொதுப்பணிகளில் குடும்பங்களை பிரதிநிதித்து வப்படுத்தியமை

★ குடும்பத்தில் ஒற்றுமையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்

★ தன் குடும்பத்தவர்களது தேவைகளை நிறைவேற்றல்

**14. புராதன கிராமத் தலைவர்கள் எப்பெயரால் அழைக்கப் படுகின்றனர்?**

★ கமிக / கிராமிக

**15. அனுராதபுர யுக காலத்தில் கிராம நிர்வாகிகள் அழைக்கப்பட்ட விதம் யாது?**

★ முன்னரைப்பகுதி – கமிக

★ பின்னரைப்பகுதி – கம்லத்தன்

**16. "கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப் படுபவரே கமிக" எனக் குறிப்பிட்டவர் யார்?**

★ புத்தகோச தேரர்

★ குறிப்பிட்ட நூல் - சமந்த பாஷாதிகாவ

**17. கிராம முறைகளின் மூன்று வகைகளும் எவை?**

- ★ எமது ஊர் ( தாம் வாழும் கிராமம்)
- ★ அயல் ஊர் (அருகில் இருந்த கிராமங்கள்)
- ★ வெளியூர்கள் (தூரத்தில் இருந்த கிராமங்கள்)

**18. கிராமத் தலைவன் எவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.**

- ★ இல்லத் தலைவனாக இருந்திருத்தல் வேண்டும். (புத்த கோசதேரர் - இந்திய துறவி)
- ★ சொத்து சுகம், செல்வம், பலம் என்பனவற்றை கொண்ட வனாக இருத்தல் வேண்டும் (ஜாதக அட்டகதா)
- ★ ஒரு குழுவை சரியாக வழிநடத்துவதற்கு ஏதுவாக அக்குழுவினரின் நம்பிக்கையைப் பெற்றவனாக இருக்க வேண்டும்

**19. கமிகவிடம் எதிர்பார்க்கும் விடயங்கள் எவை?**

- ★ கிராம பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குதல்
- ★ கிராமக் குளத்தை நிர்வகித்தல், நீரை விநியோகித்தல்
- ★ கிராமத்தவரிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல்
- ★ கிராமத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டல்
- ★ கிராம வாசிகளுடன் நல்லுறவை பேணும் வகையில் நடந்து கொள்ளுதல்
- ★ சமாதான சுகவாழ்வு கிராமத்தில் நிலவ நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- ★ திருமணத் தொடர்பு / பண்டப் பரிமாற்ற பிரச்சினைகளை தீர்த்தல்
- ★ கிராமத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவுதல்

உ – ம் ஏழை குடியானவனுக்கு கடனை வழங்குதல்

**20. "கிராமத் தலைவர்கள் மக்களுடன் நல்லுறவை பேணினர்" என்பதனை அறிந்து கொள்ள ஆதாரம் கிடைத்த இடம் எது?**

★ அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிதுல்பவ்வ எனும் இடத்தில் அமைந்துள்ள விகாரைக்கு சொந்தமான கொரவக்கல எனுமிடத்தில் உள்ள கற்குகை.

**21. சித்துல்பவ்வ எனும் இடத்தை அண்மித்த பகுதியில் இருந்ததாக கருதப்படும் கிராமியத்தலைவர்கள் யாவர்?**

★ கமிக சிவ, கமிக சுமண, கமிக சதண

**22. புராதன காலத்தில் இலங்கையில் அரசியல் அதிகாரம் வளர்ச்சி பெற ஏதுவாக இருந்தவர்கள்?**

★ பருமக எனும் பிரதானிகள்
(பிரதேச ஆட்சித்தலைவர்கள்)

**23. பருமக எனும் ஆட்சியாளர்களின் கடமைகள் எவை?**

★ எல்லாங்காவ எனும் குளத்தொகுதிகளை உருவாக்கி அனைத்து கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் செயற்படுதல்

★ பல கிராமப் பிரஜைகளினதும் நலனுக்காக தீர்மானங்களை மேற்கொள்ளுதல்

★ உலர் வலயத்தில் குடியேற்றங்கள் பரவியிருந்த பிரதேசங்களின் சிறிய அலகுகளை பரிபாலனம் செய்தல்

★ தமது பகுதிகளில் அரசராக செயற்படல்

உதாரணம் : மாத்தளை மாவட்டத்தின் எம்புல் அம்பே எனும் இடத்தில் உள்ள கல்வெட்டொன்றில் போசனி அரசள் என அறியப்பட்ட பிராந்திய நிர்வாகி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள் - பிராசின அரசன் (கிழக்குப் பிரதேச அரசன்) என்பதாகும்.

★ மக்களுடைய நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன செயற்பட்டு அவர்களை குதூகலமடையச் செய்பவர்கள்

உதாரணம் : கேகாலையில் யடஹலென எனும் இடத்தில் உள்ள கற்குகையில் பிரதேச ஆட்சியாளர் ஆட்சியாளர் துகதராஜ என அழைக்கப்பட்டமை.

(ரஜ - மகிழ்விப்பவர்.)

★ கிராமங்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தலும் கமிகமார்களை நெறிப்படுத்தலும்

**24. பெண் பிரதேதச ஆட்சியா ளர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**

★ பருமகலு

- திஸ்ஸ எனும் நடனக் கலைஞரின் மனைவி இப் பதவியை வகித்தமை
- அனுராதபுர மாவட்டத்தில் உள்ள பிராமணயாகம என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் பருமலு சுமனா பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**25. குளத்தொகுதி ஒன்றின் தோற்றத்தித்கு வித்திட்ட காரணிகள் எவை?**

★ சிறு குளங்களில் நிலவிய பற்றாக்குறை.

★ கி.மு 900 ஆண்டளவில் உலர் வலயத்தில் மழை நீரை கொண்ட சிறு குளங்களை மையமாகக் கொண்ட கிராமம் உருவாக்கப்பட்டது. கிராமமொன்றில் வாழ்ந்த 10 15 குடும்பங்களினது அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்கு குறுகிய காலத்திற்கே போதுமானதாக இருந்தது.

★ பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு விருத்தி செய்வதற்கும் நீர்ப்பயன்பாட்டிற்கும்

★ உலர்வலயக் காலநிலைக்கு தேவையான நீரை தேக்கி வைப்பதற்கு

★ நிச்சயமற்ற மழைவீழ்ச்சியும் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி போதாமையும்

**26. குளத்தொகுதி உருவாக்குவதற்கான நோக்கங்கள்?**

★ மேட்டு நிலத்தின் குளங்கள் மழை நீரை நிரப்பும் போது வெளியேறும் மேலதிக நீரை தாழ் நில குளத்திற்கு திருப்புதல்

★ இரு குளங்களுக்கிடையில் கால்வாயினூடாக நீர் பாய்வதன் மூலம் நிலம் ஈரத்தன்மையுடன் காணப்படும்.

| |
|---|
| குளத்தொகுதி பல குளங்களையும் ஒன்றிணைத்து அமைக்கப்படுவது இது "வெவ்பிரபாதனய", என அழைக்கப்படும். உலர்வலய மக்கள் "எல்லாங்காவ"என குளத்தொகுதியை அழைத்தனர். |

**27. அரசு எவ்வாறு தோற்றம் பெறுகின்றது?**

★ பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரம் மையப்படுத்தப்பட்டு ஒரு நபரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம்

**28. இலங்கையை ஆட்சி புரிந்த முதல் மன்னன் யார்?**

★ பண்டுகாபயன் (மகாவம்சம்)

**29. மத்திய மயப்படுத்திய புராதன அரசு தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் எவை?**

★ பண்டுகாபய மன்னனின் செயற்பாடுகள்

★ கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையில் இலங்கை முக்கியத்துவம் பெற்றிருந்தமை

- வர்த்தகப் பாதையின் மையத்தில் இலங்கை அமைந்திருந்ததுடன் சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெற்ற இரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள் போன்ற வர்த்தகப் பொருட்களையும் கொண்டிருந்தது. இதனூடாக சர்வதேச வர்த்தகத்தில் பங்கு பற்றும் போது சுதந்திர நாடாக செயற்பட வேண்டியிருந்தது. இதனால் முழு நாடும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டிய தேவை இருந்தது.

★ தேவ நம்பிய திஸ்ஸ – அசோக மன்னனின் இலங்கை இந்திய உறவு

- இந்திய மன்னன் அசோகனுக்கும் இலங்கை வேந்தன் தேவநம்பிய தீசனுக்கும் இடையே காணப்பட்ட நெருங்கிய உறவுகளினால் தேவநம்பியதீசன் மீண்டும் முடி சூடிக் கொண்டமை. "தேவநம்பிய" என்னும் பட்டத்தை சூடிக்கொண்டமை

**30. மத்திய மயப்படுத்திய அரசின் வளர்ச்சிக்கு பங்காற்றிய மன்னர்களைக் குறிப்பிட்டு எவ்வாறு வித்திட்டனர் என்பதை விளக்குக?**

★ பண்டுகாபயன்

- பிராந்திய அரசுகளுடன் போரிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றியமை
- தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபுரத்தை தெரிவு செய்து திட்டமிட்ட நகரமாக கட்டியெழுப்பியமை
- தனது பத்தாவது ஆட்சியாண்டில் கிராமம் முழுவதற்கான எல்லைகளை வகுத்தமை.
- சிதறிக் கிடந்த ஆரியக்குடியேற்றங்களை ஒன்றுபடுத்தி 70 ஆண்டுகள் இலங்கையை சிறப்பாக நிர்வகித்தமை

★ தேவநம்பியதீசன்

- அசோகனுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவினால் இரண்டாவது தடவையாக முடிசூடியமை.
- பௌத்த மதத்தை அறிமுகப்படுத்தியமை
- "தேவநம்பிய" எனும் பட்டப்பெயரை சூடிக் கொண்டமை

★ பாதிகாபயன்

- கி.மு 22 – 07 வரை இலங்கையை நிர்வகித்தமை
- உரோமபுரியின் ஆட்சியாளன் குளோடியஸ்க்கு தூது அனுப்பி கண்ணாடி பளிங்கு என்பவற்றை பெற்றுக் கொண்டமை
- ருவன்வெலிசாயவுக்கு மாபெரும் பூஜையை நடத்திய இவரது உருவச்சிலை இன்றும் அம் முற்றத்தில் காணப்படுகிறது.

**31. சத்திரிய மரபுப்படி முடிசூடிய முதலாவது இலங்கை மன்னன் யார்?**

**31. சத்திரிய மரபுப்படி முடிசூடிய முதலாவது இலங்கை மன்னன் யார்?**

★ தேவநம்பியதீஸன்

**32. எம் மன்னனுடைய காலத்தில் அரசியல்பலம் ஒரு நபரிடம் குவியும் நிலை ஆரம்பமானது?**

★ துட்டகைமுனு

**33. துட்டகாமினி மன்னனின் தளபதிகள் 10 பேரும் யாவர்?**

★ வேலுசுமண, நந்திமித்ர, புஸ்யதேவ, தேரபுத்தாபய, கோதையம்பர, லபியவசப, பரணன், கஞ்சதேவன், சுரநிமல, மகாசோன

**34. இலங்கை முழுவதையும் முதன் முதலில் ஒன்றுபடுத்தி ஒரு குடையின் கீழ் ஆட்சிபுரிந்த மன்னன் யார்?**

★ துட்டகைமுனு

**35. உரோமபுரியிலிருந்து இலங்கைக்கு கண்ணாடி பளிங்கு என்பன எம் மன்னன் காலத்தில் கொண்டுவரப்பட்டது?**

★ பாதிகாபய மன்னன்

**36. வசப மன்னன் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரதி நிதியாக நியமிக்கப்பட்ட பிரதேச ஆட்சியாளன் யார்?**

★ ரிஷிகிரி (இஸகிரிய)

**37. அசோக மன்னனால் தேவநம்பியதீஸ மன்னனின் முடிசூட்டு விழாவிற்காக அனுப்பப்பட்ட பஞ்ச வஸ்த்துக்களைக் குறிப்பிடுக.**

★ ஆலவட்டம், சாமரை, பாதணி, மங்களவாள், நெற்றிப்பட்டம்

**38. புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவத்திற்கு எப் பிரதேசத் தலைவர்கள் தேவநம்பியதீசனால் அழைக்கப்பட்டவர்கள்?**

★ கதிர்காமம் / சந்தனகாம

**39. மத்தியகால ஆட்சியாளரிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் சேவைகள் எவை?**

★ பொருளாதார ரீதியானவை
- உ - ம் குளங்கள் கால்வாய்கள் அமைத்து நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுதல்

★ பாதுகாப்பு ரீதியானவை
- உ - ம் வெளிநாட்டு எதிரிகளின் படையெடுப்பு முதலானவற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்தல்

★ ஆன்மீக ரீதியானவை
- உ - ம் தூபிகள், விகாரைகள் போதி மனைகள் அமைத்து மக்களின் ஆன்மீகத் தன்மையை வளர்த்தல்
- உ - ம் பிக்குகளின் ஆலோசனைப்படி மன்னன் ஆட்சிசெய்தல்

**40. மத்தியகால ஆட்சியாளர்கள் சூடிக்கொள்ள விரும்பிய பெயர்கள் யாவை?**

★ போதிசத்துவர

★ ஆண்டவன்

★ மலைகளின் அரசன்

★ சக்கரவர்த்தி, (முழு உலகிற்கும் அரசன்)

★ குபேரன்

**41. பின்வரும் சிறப்பு பெயர்களால் அழைக்கப்பட்ட மன்னர்கள் யாவர்?**

* ★ நரேஸ்வரன் (மனிதர்களின் கடவுள்)
  * குட்ட கண்ண அபயமன்னன்
* ★ மின்னேரியா தெய்வம்
  * மகாசேனன்
* ★ அலகபய மகாராஜா (இந்திரலோகங்களின் மகாராஜா)
  * 1ம் காசியப்பன் (குபேரக்கடவுள்)
* ★ கலிங்க சக்கரவர்த்திப் பெருமான்
  * நிஸ்ஸங்கமல்லன்

**42. அரச கோட்பாடுகள் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக.**

* ★ நரேஸ்வர
  * தம்புள்ளை விகாரையில் அமைந்துள்ள பாறைக் கல்வெட்டில் குட்டகண்ண அபய மன்னன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட தோற்றப் பெயர்
  * மனிதர்களின் கடவுள் என்பது இதன் பொருள்.
* ★ மின்னேரித் தெய்வம்
  * மக்களின் நல்வாழ்வுக்காக மின்னேரியாக்குளத்தை நிர்மாணித்த மகாசேன மன்னனை மக்கள் அழைத்துக் கொண்ட தோற்றப் பெயர்
* ★ அலகபய மகாராஜா
  * இந்திரலோகங்களின் மகாராஜா என்பது இதன் பொருள்
  * குபேரக்கடவுள் எனவும், மலையின் அரசன் எனவும் குறிப்பிடலாம்
  * முதலாம் காசியப்ப மன்னன் குபேரக்கடவுளாக தன்னை கருதிக் கொண்டமை
  * புராதனகால ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த அரசர்கள் கையாண்டு வந்த ஒரு பெயராக மலையின் அரசன் என்பது காணப்படுகிறது.

★ சக்கரவர்த்தி

- முழு உலகத்திற்கும் அரசன் என்பது இதன் பொருள்
- சிங்களத்தில் சக்விதி என இச்சொல் அறிமுகப்படுத் தப்படுகின்றது
- நிஸங்கமல்ல மன்னன் தன்னை இனங்காட்டிக் கொள்ள காலிங்க சக்கரவர்த்தி பெருமான் எனும் கோட்பாட்டை பிரயோகித்துள்ளார்.

**43. புராதன கால இலங்கையில் அரசுரிமை கிடைத்த விதம் யாது?**

★ சகோதரனிடமிருந்து சகோதரனுக்குக் கிடைத்தது.

★ அரசனின் இளைய சகோதரர்களுள் மூத்தவனுக்கே ஆட்சியுரிமை கிடைத்தது.

உதாரணம் - தேவநம்பியதீசனுக்குப் பின்னர் அவனது சகோதரனுக்கு ஆட்சியுரிமை கிடைத்தது. (உத்திய, மஹாசிவ, சூரதிஸ்ஸ, அசேல)

உதாரணம் - துட்டகைமுனு மன்னனுக்குப் பின் அவனது சகோதரன் சத்தாதிஸனுக்கு ஆட்சியுரிமை கிடைத்தமை.

★ தந்தையிடமிருந்து மகனுக்குக் கிடைத்தது.

உதாரணம் - காவந்தீஸனுக்குப் பின் மகன் துட்டகைமுனு

உதாரணம் - வசபனின் பின் மகன் வங்கநாசிகதிஸன்

★ அரசனுக்கு மூத்தபுதல்வன் இல்லையேல் அடுத்த மனைவியின் மூத்த புதல்வனுக்கு அரசுரிமை கிடைத்தது.

உதாரணம் : தாதுசேன மன்னனிடமிருந்து இரண்டாவது மனைவியின் மூத்தமகன் காசியப்பன் ஆட்சியைக் கைப்பற்றியமை.

★ அரசுரிமையாளன் இல்லாத சந்தர்ப்பத்தில் அரசனின் மனைவியின் சகோதரன் அரசனின் சகோதரியின் புதல்வன் ஆகியோருக்குச் சென்றது.

**44. புராதன காலத்தில் மத்திய நிர்வாக முறைமை இலகுபடுத்தப்பட்ட தன்மையினை குறிப்பிடுக.**

| | |
|---|---|
| ★ மகாராஜா | - மறுபுறுமுகா |
| ★ தலைமை அமைச்சர் | - மகாஅமதி (மஹமத) |
| ★ அமைச்சர்கள் | - (அமெத) |
| ★ தளபதிகள் | - சேனாதிபதி |
| ★ பொருளாளர் | - படகரிக |
| ★ உணவுச்சாலை அதிகாரி | - பதகு |
| ★ வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி | - கொதுறுகேனா |
| ★ நகர பரிபாலகர் | - நகரகுத்திக |
| ★ குதிரைப் பிரிவின் தலைவர் | - அச அதெக |
| ★ யானைப் பிரிவின் தலைவர் | - ஹதி அதெக |
| ★ நாட்டிய பிரிவின் தலைவர் | - நட அதெக |
| ★ காசு அச்சிடும் பிரிவின் தலைவர் | - ரூப அதெக |
| ★ வர்த்தக பிரிவின் தலைவர் | - பன அதெக |
| ★ நகரகட்டட நிர்மானி | - நகர வடிக |
| ★ அரச செயலகத் தலைவர் | - (பன பெடிக) |

**45. எல்லாளனிடமிருந்த சர்வதேச துறைமுகமான மாந்தை (மாதொட) துறைமுகத்தை மீட்டெடுத்த மன்னர் யார்?**

★ துட்டகைமுனு

**46. துட்டகாமி மன்னனின் வெற்றிக்கு காரணமாக திகழ்ந்தவர் யார்?**

★ தந்தை காவந்தீஸன்

**47. எல்லாளனுக்கெதிராக துட்டகாமினி போர் தொடுத்தமைக்கு கூறப்படுகின்ற காரணம் யாது?**

★ பௌத்த சாசனத்தின் நலனுக்காக

**48. துட்டகைமுனு மன்னனின்சிறந்த சேவைகள் எவை?**

★ பௌத்த மத விருத்திக்காக ஏறத்தாழ 89ற்கும் மேற்பட்ட சமயக் கட்டடங்களை உருவாக்கியமை.

★ எல்லாளனைத் தோற்கடித்தனூடாக அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு இலங்கை முழுவதிலும் மத்திய மயப்படுத்தப்பட்ட ஆட்சியை ஏற்படுத்தியமை

★ ரூவன் வெலிசாய கட்டப்பட்ட வேளையில் ஈடுபட்டவர்கள் அனைவருக்கும் சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டமை. மற்றும் ருவன்வெலிசாயாவை கட்டியபோது அதன் நாற்றிசை வாயில்களிலும் தானமளிக்க ஏற்பாடு செய்தமை

★ தேரவாத பௌத்தமத வளர்ச்சிக்கு பாடுபட்டமை. (தேரவாத காவலன்)

★ அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்ட பின்பு, முன்னர் பருமகர்களாக பதவி வகித்தவர்கள் பல பதவிகளில் அமர்த்தப்பட்டமை

- உ - ம் : பொருளாளர் வரி அறவிடப்பட்டமை

★ எல்லாளனைத் தோற்கடிக்க தான் எடுக்கும் நடவடிக்கை பௌத்த சாசனத்தினதும், நாட்டினதும் நலனுக்காகவே என்று அவன் கூறியமை

★ எல்லாளனைத் தோற்கடித்ததினூடாக துட்டகைமுனு மாந்தோட்ட துறை முகத்தினை மீட்டெடுத்து இந்து சமுத்திர வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட தயராகியமை

★ எல்லாளனின் கல்லறைக்கு அனைவரும் மரியாதை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டதன் மூலம் தனது அரசியல் சாணக்கியத்தை வெளிப்படுத்தியமை

★ தன் தம்பி திஸ்ஸனை உறுகுணரட்டை பொறுப்பாக நியமித்து முழு நாட்டுக்கும் தான் மகாராஜவாக முடிசூடியமை

**49. இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன் யார்?**

★ வசபன்

**50. வசப மன்னனின் சேவைகள் எவை?**

★ உள்நாட்டு நிர்வாகத்தை முறையாக கட்டியெழுத்தியமை

★ உள்நாட்டு நிர்வாகத்தை முறையாக கட்டியெழுப்பும் முகமாக பிரதேச நிர்வாக முறையை அறிமுகப் படுத்தியமை.

★ ஆதாரங்கள் கண்டறியப்பட்ட இடங்கள்

- வடக்கு - வல்லிபுரம்
- கிழக்கு - மட்டக்களப்பு
- தெற்கு - சிதுள்பவ்வ
- மேற்கு - குரணாகல்

★ அரசவரி அறவீடு அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டமை

★ முதன் முதலில் பாரிய குளங்களை அமைக்கும் முறையை தோற்றுவித்தமை.

★ 11 குளங்களையும் 12 கால்வாய்களையும் அமைத்ததுடன் ரண்மசுப்பூங்கா தடாகங்களுக்கு சுரங்க வழியூடாக நீரைப் பாய்ச்சினான். (சீனர்களுடன் ஈடான நீர்ப்பாசன பொறியியல்)

★ பிக்குமாரின் தேவையை நிறைவு செய்ய விகாரைகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கியமை.

★ விகாரைகள் பலவற்றை புணரமைப்பு செய்து கொண்டமை.

**51. வசப மன்னன் காலத்தில் பாரிய குளங்கள் அமைக்கப் பட்டமைக்கான காரணம் யாது?**

★ இந்தியாவின் கிருஷ்ணாப் பரதேசத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையினால் இலங்கையில் உற்பத்தியாகும் தனியங்க்ளுக்கு அதிக கேள்வி ஏற்பட்டமையால் புதிய நீர்த்தேக்கங்கள் அமைக்க வேண்டியேற்பட்டமை

**52. 77 ஆண்டுகால சோழர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து இலங்கையை மீட்ட சிங்கள மன்னன் யார்?**

★ 1ம் விஜயபாகு

**53. 1ம் விஜயபாகு மன்னன் தனக்கு உதவி செய்த சித்தாரும்பி புத்தநாயக்க எனும் அதிகாரிக்கு பரிசுகளும் சலுகைகளும் வழங்கியமை பற்றிய ஆவணமாக அமைவது எது?**

★ பனாகடுவ செப்பேடு
- இது காலியில் கண்டறியப்பட்டது.
- அத்வரலியன தேரர் எனும் மந்திரியால் வரையப்பட்டது

**54. 1ம் விஜயபாகு மன்னனின் சேவைகளை மதிப்பிடுக?**

★ இலங்கையின் இறைமையைப் பாதுகாத்த இலங்கை அரசர்கள் முதலாம் விஜயபாகு முக்கியம் பெறுகின்றான்.

★ சிறுவயதில் கீர்த்தி என்று அழைக்கப்பட்ட முதலாம் விஜயபாகுவுக்கு அடைக்கலம் வழங்கியவர், சித்தாரும்பி புத்தனாயக்க என்ற பாதுகாப்பு அதிகாரியாவார். இது பற்றி விஜயபாகுவின் பனாகடுவ செப்பேடு குறிப்பிடுகின்றது.

★ 1055இல் உருகுணயின் அரசனாக முதலாம் விஜயபாகு தன்னை பிரகடப்படுத்தினான்

★ பொலன்னறுவை ஆட்சி செய்த சோழரைத் தோற்கடிக்க உருகுனையிலிருந்து 3 வழிகளில் படைகளை அனுப்பி சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்தமை

★ 1070இல் முழுநாட்டுக்கும் மன்னனாக அநுராதபுரத்தில் முடிசூடிக் கொண்ட இவன் தனது தலைநகரமாக பொலன்னறுவையே தெரிவு செய்தான்.

★ மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக பல சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டமை
- விகாரைகளை புணரமைத்தமை

  உதாரணம் : போதிமரக்கோவில்
  ஜம்புகோளவிகாரை
  பண்டுவஸ் நுவரவிகாரை

- சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையை செப்பனிட்டு தங்கும் இடவசதிகளையும் ஏற்படுத்தி சிவனொளிபாத மலையின் நிர்வாகச் செலவிற்காக கீலிமலை என்ற கிராமத்தையும் ஒதுக்கினான்.
- பொலனறுவையில் மூன்று மாடிகளைக் கொண்டதாக தலதாமாளிகையை அமைத்தான்.

★ நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையை ஏற்படுத்தியமை

- பத்தகுண எனும் குளம் அமைத்தமை
- எலஹரக் கால்வாயின் சிதைந்த பகுதிகளை செப்பனிட்டமை

★ நாட்டில் சிறந்த ஆட்சியை ஏற்படுத்தும் பொருட்டு பொருத்தமான வெளிநாட்டு கொள்கைகளை பின்பற்றியமை

- பர்மா, கம்பூச்சியா போன்ற நாடுகளுடன் வர்த்தக உறவை பேணியமை.
- பாண்டிய நாட்டுடனும் கலிங்க தேசத்துடனும் திருமண உறவை பேணியமை

**55. 1ம் விஜயபாகு பொலநறுவையைத் தலை நகரமாக்கி யமைக்கான காரணம் யாது?**

★ இந்து சமுத்திர கிழக்குப் பிராந்தியத்துடன் இலகுவில் தொடர்பை ஏற்படுத்தக்கூடியவாறான திருகோணமலைத் துறைமுகம் பொலனறுவைக்கு அருகில் இருந்தமை

★ வசபன்

- இயற்பெயர் : வசப
- மனைவி பெயர் : பொத்தாதேவி
- ஆட்சிக்காலம் : கி.பி 67 - 111 வரை
- மகன் : வங்கநாசிகதீஸன்
- மரபு : இலம்பகர்ணம்
- புகழ் : இலம்பகர்ண மரபின் முதலாவது அரசன்

★ 1ம் விஜயபாகு

- இயற்பெயர் : கீர்த்திகுமாரன்
- தாய் : லோகிதா
- தந்தை : மொகல்லானன்
- வழிகாட்டிகள் : புத்தராஜன், தேவமல்ல
- சிறப்பு : 77 ஆண்டுகால சோழராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தமை

★ துட்டகைமுனு

- இயற்பெயர் : காமினி அபய
- தந்தை : காவந்தீஸன்
- தாய் : விகாரமாதேவி
- மகன் : சாலியகுமார
- சகோதரன் : சத்ததீஸன்
- சமயப்புகழ் : தேரவாதக் காவலன்
- சிறந்த தூபி : ருவன்வெலிசாய



Designed By